320

D.R.C. NO: 32

-1-1900

இடரியன்

C

O-,6x
N06
76622

THE

# ARYAN

A Monthly Magazine Devoted to Hindu Religious and Philosophy.

August 1906.

# "ஆரியன்."

கும்பகோணம் ஆரியன அச்சுக்கூடத்தினின்று வெளிப்படும்

## மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

லோகோபகார சிந்தையுள்ள பிராம்மணர் ஸந்நியாஸி ஒருவரது பார்வையில் நடத்தப்படுகின்றது

பராபவ௵ ஆவணி௴

புத்தகம் 1. } 1906ம் ௵ ஆகஸ்டு௴ { லக்கம் 1

இதிலடங்கியுள்ள விஷயங்களாவன.

ஸ்ரீ சங்கரபகவத்பாத சரித்திரம் 1.
ஸ்வதேசியம் 7.
யோகி போகி ஸம்வாதம் 9.
கலிகேதஸ் 13.
பிரபஞ்சநாடகம் 16.
நமது பத்திரிகை 17.
பத்திரி ஸங்கிரக குறிப்புகள் 19.
திருவருள் வேண்டும் 21.
உண்மைத்தாய் 23.
மனநிலை [illegible] 25.
குரங்குப்பிள்ளை 29.
மடாதிபதிகள் 33.
இரகஸ்யாசிரமம் 35.
பெண்களுக்கு ஆபரணங்கள் 36.
வர்த்தமான குறிப்புகள். I II.

வருஷ சந்தா 1—8—0. ஆறுமாதத்திற்கு 1—0—0
வெளிதேசங்களுக்கு 2—0—0. தனிப்பத்திரிகை 0—4—0

Printed and Published by the Proprietor C. S. Rathakrishna Iyer, at the Aryan press, No. 9 Chakrapaniswami sannadi Street Kumbakonam.



## ஓர் வேண்டுகோள்

1906வரு ஆகஸ்டு-மீ முதல் ஆரியன் என்னும் இம்மாதாந்தரப் பத்திரிகை நம் தேசத்து மதார்ம்ம நாபிவிர்த்தியை விருத்தி செய்யும் பொருட்டு பிரசுரிக்கப்படுகிறது பல ஆரிய விஷயங்கள் எழுதிவரப்படும்.

இப்பத்திரிகை ஒவ்வொரு மாதம் 20-உக்குள் தவறாமல் வெளிவரும் இப்பத்திரிக்கைக்கு னவான்கள் சந்தாதார்களாக சேர்ந்து ஆதரித்து வரும்படியாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்

பத்திரிகை, புஸ்தகம், ரூபங்கள் அனுப்புவோர் அடியில்கண்ட விலாசத்திற்கு அனுப்பவும்.

நமது பத்திரிகையை இன்று மதிப்பிர்ச்சிறந்த கனவான்களுக்கு அனுப்பியிருக்கின்றோம். அன்னோர்கள் நமது பத்திரிகைக்கு சந்தாதார்களாகச் சேர்ந்து நமது பத்திரிகையை ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

நமது உள்ளூர் சந்தாதார்கள் நமது பேறுண்டியும் வரும் ஆர்டர் புஸ்தகத்தில் கையெழுத்துப்போட்டு அவர்களுக்கு வேண்டிய காலத்திற்கு முன் பணம் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

C. S. ராதாகிருஷ்ணய்யர்,
புரொப்ரைட்டர்.

## தியாகராஜஸ்வாமி சரித்திரம்

தென்னிடெங்கும் சங்கீதவித்வான்களிலெல்லாம் சிறந்தவராயிருந்து காலஞ்சென்ற தியாகய்யர் என்று வழங்கிய தியாகராஜஸ்வாமியின் சரித்திரத்தை வெளிப்படையில் அருகில் அச்சிடப்படுகிறது புஸ்தகம் வேண்டியோர் ஆரியன் மேனேஜருக்கு 1¼ அணா தபால்ஸ்டாம்புகள் அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

---

பரோடாவில் சுதேசிய முயற்சியின் அபிவிருத்தி மிகவும் ஆச்சரியகரமாயிருக்கிறது அங்கே 41 கிளைச்சங்கங்கள் இருக்கின்றன. ஓர் தொழிற்பாடசாலையுளது, கல்கத்தாவிலிருந்து சுதேசிய பதார்த்தங்கள் தருவிக்கப்பட்டு அவற்றை இளைஞர்கள் முதுகின்மீது சுமந்து சென்று விற்கிறார்கள். 523 விவகாரங்கள் கோர்ட்டுகளுக்குப்போகாமல் சுதேசிய பஞ்சாயத்தில் தீர்ப்புச் செய்யப்பட்டிருக்கின்றன. வருஷாரம்பத்தில் அவ்வூரிலே 56 அந்நிய சாராயக்கடைகள் இருந்தன இப்போது ஒன்றுதானிருக்கிறது. சுதேசியத்திற்கு விரோதிகளாகிய 340 பேர் விலக்கி வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

76622
O-162

# "ஆரியன்."

கும்பகோணம் ஆரியன் அச்சுக்கூடத்தினின்று வெளிப்படும்.
மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.
பராபவஹு ஆவணிமீ

புத்தகம் 1. } 1906-வரு ஆகஸ்டுமீ { லக்கம் 1.

## ஸ்ரீசங்கரபகவத்பாத சரித்திர ஸங்கிரஹம்.

பூர்வத்தில் பௌத்த, சமண, சார்வாகாதி, மதஸ்தர்களால், நம்மவர் மயக்கப்பட்டு, வேத நம்பிக்கையை, இழந்து வருணாச்சிரமாதி பேதத்தைவிட்டு கொண்டதே கோலம் கண்டதே காக்ஷியாக அலைந்து விட்டனை, நாரதர் என்னும் லோகோபகாரத்தையே தொழிலாகக்கொண்ட மகரிஷியானவர் கைலைக்கெழுந்து, பரமசிவனிடத்தில் நம்மவர் சிறுமையை தெரிவிக்க அதை அறிந்த எம்பெருமான் மலையாளத்தில் காலடிகிராமத்தில் சிவகுரு ஆரியாம்பிகை என்னும் தபோநிஷ்டர்களான தம்பதிகட்கு ஸ்ரீ சங்கரனென்னும் புத்திரனாய் உதித்தார். அவர் பிறந்தபின் மூன்றாமாண்டில் சிவகுரு என்னும் பிராம்மண சிகாமணியின் காலம் சென்று விட்டது. பிறகு அக்குழந்தை மாதாவின் பரிபாலனத்தால் வளர்ந்து ஏழாமாண்டில உபநயனம் பண்ணப்பட்டு குருவிடத்தில் சென்று வேதசாஸ்திரங்களை வெகு சீக்கிரத்தில் தெரிந்து கொண்டார். அவர் சாஸ்திரமுறையையும் உலகவழக்கையும் தவறாது நடத்த, குருவையடைந்ததேயன்றி வேறில்லை. ஏனெனில் சர்வஞ்ஞமூர்த்தியானபடியால் அவர் அறியாத விஷயம் யாதுளது. அக்காலத்திலேயே அகஸ்தியர் முதலிய அநேக மஹரிஷிகள் அவரிடத்தில் ரகசியமாய் வந்து சர்வஞ்ஞா என்று கண்டு பரமானந்தம் பெற்றார்கள். அனைவரும் இவர் புத்திவன்மையைச்செவியுற்று ஆனந்தமடைந்தார்கள். இங்ஙனமிருக்க தான் வந்த காரியத்தை நிறைவேற்ற எண்ணங்கொண்ட கருணாநிதி தன்மாதாவை நோக்கி ஒருநாள் அம்மா, இச்சம்ஸாரம் பெரிதும் கொடிது, இச்சரீரமும் வாழ்க்கையும் மின்னற் கொடிபோல் க்ஷணத்தில் அழியும், இச்சம்ஸாரத்தில், துக்கமேயன்றிச்சுகமில்லை, நம்மோடு பிறந்தவர்களும், முன்பிறந்தவர்களும் இறந்துகொண்டே இருக்கிறார்கள், நமக்கும் ஆயுள் சீக்கிரமே ஒழிபட, நீர்மேலுள்ள குமிழிகள்போல சரீரம் உண்டாகி அழிகிறது இதை நிலையென்று எண்ணலாகாது, ஆனதால் இப்பொழுதே சந்நியாசம்பெற்று முக்திக்குரிய மார்க்கத்தைத் தேடவேண்டுமென பற்பலவிதமாகக்கூறினார். அதைக்கேட்டதாய் ஆ என்று ஆச்சரியமும் துக்கமும் அடைந்தவளாய், குழந்தாய்! உன்னை அருந்தவஞ்செய்து பெற்றெடுத்தேன் நீ இப்பொழுதே வைராக்கியமாகப்பேசுகிறாயே, இப்பாலியத்தில் கற்றுத்தேர்ந்துபண்டிதனாய் ஓர் பெண்மணியை மணந்து அவளோடு இல்லறத்திலிருந்து தேவமனுஷ்ய பித்ருக்கடன்களைச்செலுத்தி அந்திமகாலத்தில் முதுமையிலன்றோ சந்நியசிக்கவேண்டும், "குட்டிமேதாந்தம் குடியைக்கெடுக்கும்" என்பதுபோல இப்பொழுதே விரக்தியடைந்தாய், அது கூடாது என்று மறுத்தாள். அதைக்கேட்ட எம் சங்கரமணி சிறிது மாதாவின் வார்த்தைக்கிணங்கியதுபோல் நடித்தனர். ஒருநாள் இருவியான

மாதாவுடன் பூரணியென்னும் நதிக்கு ஸ்நானஞ்செய்யச் சென்றனர். அந்த நீரோட்டத்தில் ஓர் முதலை தமது பாதத்தைப்பிடித்து ஆழ்ந்தநீரில் இழுத்தது. அதுகண்டு இதுதான் நமது காரியம் நிறைவேறுங் காலமென்றெண்ணி மாதாவைப்பார்த்து அம்ம, என்னை முதலை இழுக்கிறது இன்னும் சில நிமிஷத்தில் எனது உயிர்போய்விடும், இப்பொழுதாவது சன்னியசிக்க அனுக்கிரஹிப்பாயானால், நான் பிழைத்தாலும் பிழைக்கலாம், என்று வருந்திக்கேட்டனர் அதைக்கேட்டதாய் என் கண்மணியே உன்னை இழந்து நான் எப்படி ஜீவிப்பேன் நீ சந்நியாசியாகவாவது ஜீவித்திருந்தால் காதாலாவது உனது வாழ்வைக் கேட்கலாமன்றோ ஆதலால் சன்னியசித்துக்கொள்க என ஆஞ்ஞை அளித்தனள் அதைக்கேட்ட மெய்ப்பெருமான் மானஸிகமாக சாஸ்திரீய சந்நியாசத்தை ஸ்வீகரித்தார் உடனே மறுஜன்மமானதுபோல் முதலைவிட்டுவிட்டது. வெளிவந்து மாதாவை நமஸ்கரித்து அவளை தமது பந்துக்களிடத்தில் ரக்ஷிக்கும்படி ஒப்புவித்து குருவைநாடி ஸ்தலங்கடோறும் சென்று குருவாயூர் என்னும் ஸ்தலத்திற்கு வந்தார். இவரது இளம்பருவத்தையும் ஸ்வீகரித்திருக்கும் பெரிய ஆச்சிரமத்தையும் கண்டு, நம்பூரி பிராமணர்கள் இவரது சன்னியாச ஆச்ரமத்தை அநேக நியாயங்களால் மறுத்தார்கள். அதைச்செவியுற்ற நம்குருமூர்த்தி சன்னியாஸ ஆச்சிரமமே, மோக்ஷஹேதுவென்றும், அதைச் ஸ்வீகரிப்பதற்கு காலநியமமில்லை, யென்றும் எப்பொழுது வைராக்கியமுண்டாகிறதோ அப்பொழுதே ஸ்வீகரிக்கலாமென்றும் அநேக சுருதியுக்தி பிரமாணங்களால், அவர்கட்கறிவித்து அவர்களால் "அசிந்த்யாஸ பாதஷடபாறுகாத்யர்" என்னும் பட்டமளிக்கப்பெற்று அங்கு அநேக அற்புதங்களைச்செய்து தீர்த்தாடனத்தின் பொருட்டு யாத்திரைசெய்தார். இங்ஙனம் யாத்திரை செய்துகொண்டு அநேக ஸ்தலங்களை தரிசித்து குருவைத்தேடி நர்மதா நதிதீரத்தில் சஞ்சரிக்குங் காலத்தில் ஓர் அடர்ந்த சோலையில்வந்தவுடன் சரீரத்தில் மயிர்க்கூச்சலும் மனதில் ஓர் ஆனந்தமும் தைரியமும் உதிக்க அதுகண்டு இதுதான் நமது குருநாதன் வசிக்கும் இடமென்று மகிழ்ந்து ஓர் புறமாய்த்திரும்பியவுடன் ஓர் குகையைக் கண்டனர். அதின் வாயிலில் போய்நின்று உற்றுப்பார்த்ததும் ஓர் மஹா யோகி சித்தாசனத்திலிருந்து சித்தத்தை நிலைநிறுத்தி சிந்தையன்றியிருக்கும் அழகை நோக்கிப்பிரமித்து தன்னைமறந்து பரமானந்தராய் அவரை ஸ்தோத்திரம் பண்ணினார் அதைக்கேட்ட அம்மஹாயோகி இவரது வாக்கின் வல்லமையையும் புத்தியின் நுட்பத்தையும் முகத்தின் மலர்ச்சியையும் ஆச்சிரமத்தின் பெருமையையும் இளமைப்பருவத்தையும் நோக்கி அருகிலழைத்து அபயஸ்தம்கொடுத்து ஞானதிருஷ்டியால் சங்கரனென்றுகண்டு லோகத்தை ரக்ஷிக்கவந்த பெருந்தகையே தம்போலியருக்கு உபதேசமும் வேண்டுமோவென்றார் அவர்தான் ஸ்ரீ மதாசார்யர்களுடைய குரு ஸ்ரீ கோவிந்த யோகி என்பவர். அதைக்கேட்ட சங்கரர் கருணைக்கடலே லோகமுறைமையும் வேதவிதியையும் தவரலாகாதன்றோ என்றார். ஆம், அங்ஙனமே என்று அப்பொழுதே அவருக்கு வேதத்தின் முடிவான மஹாவாக்கியத்தை உபதேசித்து பிரம்மத்தின் பிரதீகமான பிரணவத்தையும் உபதேசித்துத் தனது சிஷ்யராக ஸ்வீகரித்தார் அங்கு சிலகாலம் குருவிற்கு சிசுருஷை பண்ணிக்கொண்டிருந்து அவராக லோகஹிதத்திற்காக அத்வைதஸ்தாபனம் செய்கவென ஆஞ்ஞையைப்பெற்று தனது பரமகுருவான கௌடபாதாசாரியாரை அடைந்து அவரது அனுக்கிரஹம்பெற்றுக் காசிக்குச்சென்று வியாஸபகவான் தெரிசனத்தை நாடிப் பத்திரிகாச்சிரமத்திற்குப்போகும் வழியில் நாராயணா என்னும் மஹாயோகியின் தெரிசனம்பெற்று அவர் வியாஸ தெரிசனம் இப்பொழுது கிடைக்காது நீ காசிக்குப்போய் உபநிஷத்து,



பிரம்மசூத்திரங்களை முதலியவைகட்கு பாஷியஞ்செய்து அத்வைத மதத்தை நிலைநிறுத்த பிரவிருத்திப்பீரேல் அங்கேயே உமக்கு வியாஸரது அனுக்கிரஹம் கிடைக்கும் என்று தெரிவிக்க அங்ஙனமே திரும்பிவந்து விட்டார். அந்த காசியில் தனக்கு ஓர் ஆச்சிரமம் ஏற்படுத்திக்கொண்டு உபநிஷத்தின் வாக்கியங்களெல்லாம் ஒரே பிரம்மஸ்வரூபத்தைக்கூறுகிறதென்றும் அதையன்றி மற்றையபதார்த்தமெல்லாம் கானலில் ஜலம்போல் அப்பிரமத்தினிடத்திலேயே அஞ்ஞானத்தால் கல்பனையாய்த்தோன்றுகிறதென்றும் அவ்வஞ்ஞானமொழிந்தால் ஜீவனும் அந்த பிரம்மஸ்வரூபத்தையன்றிவேறில்லையென்றும் அப்பிரம்மம் ஒன்றே மூன்றுகாலத்திலும் அழிவில்லாததாயும் சத்தியமாயும் ஞானமாயும் ஆனந்தமாயும் எப்பொழுதும் பிரகாசிக்கிறதென்றும் கருத்துக்களை அமைத்து முற்கூறிய புத்தகங்களுக்கு பாஷியமியற்றினார் அப்பாஷியங்களின் பெருமையை என்னென்று சொல்லுவேன் திராக்ஷபாகமாயமைந்த பாஷையும் மதங்களுடைத்திற் தத்திற்காகப்பிரபோதித்திருக்கும் ஆழ்ந்தயுக்திகளும் ஒவ்வொரு இடங்களில் சுருதிகளின் மர்மங்களை எடுத்துக்காட்டும் புத்திவன்மையையும் சூத்திரங்களின் தாத்பரியமமைந்தசுருதிகளைக்கோர்த்த நுட்பத்தையும் நோக்கினால் சங்கரனையன்றி மற்றோரால் சாத்தியமில்லை என்றே தோன்றும் அதற்கென்றே அவதரித்த மூர்த்தியானதால் அதின்பெருமையைச் சாற்றவும்வேண்டுமோ பிறகு அப்பாஷியத்தைப்பற்றி வந்த பூர்வபக்ஷவாதிகளனைவரையும் கண்டித்து காசியிலேயே அநேகருக்கு பாடம் பண்ணிவைத்துக்கொண்டு இந்திரனது சபையில் உள்ள பிரகஸ்பதி பகவான்போல் விளங்கினார் அதைக்கேட்ட காசிராஜன் நம் குருநாதரைப்பார்க்கவந்து பரமானந்தம்பெற்று அடிமைத்தொண்டராய் தனது சர்வசொத்தையும் தன்னையும் அவர் சரணத்திற்கே அர்ப்பணம்பண்ணி உம் ஆஞ்ஞைப்படி நடக்கிறேன் என்று அஞ்சலிபந்தனாய் நின்றான் அதைக்கண்டு அவனை சிஷ்யனாய் ஸ்வீகரித்து அங்கு சிலகாலம் வசிக்கும்போது கிழக்கே இருந்து ஓர் பிராம்மணச்சிறுவர் திறனாய் சாஸ்திரத்தில் வல்லவராய் தனது பாதத்தை வணங்கி சன்னியாசத்தை கொடுக்கவேண்டுமென்று பிரார்த்திக்க அவரது வைராக்கியத்தையும் பக்தியையும் கண்டு அவருக்கு ஸன்னியாஸத்தைக்கொடுத்து உபதேசித்து அருகில் வைத்துக்கொண்டார் ஒருநாள் நதிக்கு அக்கரையில் ஆசார்யமணிகள் இருக்குங் காலத்தில் தனது சிஷ்யனை அழைத்தார் உடனே வேறுயோசனையன்றி நதியில் இறங்கி ஆழத்தில் நடக்கத்துடங்கினார் அப்பொழுது கங்காதேவியானவள் அவரது ஒவ்வொரு பாதத்திற்கும் ஒவ்வொருபத்மமாகக்கொடுத்தாள் அதைக்கண்டாசாரியாள் அச்சிஷ்யருக்கு பத்மபாதர் என்று யோகப்பட்டம் அளித்தார். இப்படி அநேகசிஷ்யர்களுடன் அமர்ந்திருக்குங் காலத்தில் ஒரு கட்டாலையில் ஓர் விருத்தர் ஊன்றுகோலோடு ஆசாரியாள் சன்னிதானத்திற்கு வந்தார் அவரைக்கண்டதும் அவருக்கு உபசாரஞ்செய்து ஓர் ஆஸனத்தில் எழுந்தருளும்படி பிரார்த்தித்தார் அப்பொழுது அவ்விருத்தவேதியர் ஆசாரியாளது பாலப்பருவத்தையும் புத்தியையும் பார்த்து வியந்து எதிரில் இருக்கும் புஸ்தகம்யாது என்றார். அப்பொழுது பத்மபாதர் வியாஸசூத்திரத்தின் "அத்வைத பாஷியம்" என்றார் அதைக்கேட்டு அவ்வேதியர் அதிற்சிலசூத்திரங்களின் பாஷியத்தை படிக்கவென ஆஞ்ஞாபித்து அதில் அநேகசங்கைகளைக்கேட்டார். ஒவ்வொன்றுக்கும் பக்ஷமாக உத்தரம் வருவதைக்கண்டு மகிழ்ந்து விதண்டையாக சிலகேழ்விகள் கேட்டனர் அதற்கும் சாவதானமாக சமாதானம் அறைந்தார். ஆண்டு பத்மபாதர் அவ்வேதியரது புத்திவன்மையையும் தேஜஸையும் ஞானதிருஷ்டியால் அறிந்து வணக்கத்துடன் கூறுகிறார் சங்கரனும் நாரணனும் ஒன்றுகூடி வாதித்தால் மத்தியஸ்தம்

பணிந்துவருபவர் என்று இவ்விதமாக அநேக வார்த்தைகளைச் சொல்லியவுடன் அவ்வயோதிகர் வியாஸபகவனாக எதிரில் தோன்றினார் உடனே ஆசார்யாள் நமஸ்கரித்து அஞ்சலிபந்தராய் ஹே ப்ரபோ நான் வந்தகாரியம் முடிந்துவிட்டது எனக்கும் பதினாறு வயதும் முடிந்தது இனி எனது கைலாசத்திற்கு செல்வேன் என வியாஸபகவான் இன்னும்பதினாறு ஆண்டிருந்து எனது கருத்தாகிய அத்வைதமதத்தை உலகெலாம் பிரகாசிக்கும்படி ஸ்தாபித்து பிறகு போகலாமென்று கூறிமறைந்தார் அவ்வாஞ்ஞையைச்சிரமேற்கொண்டு காசிஅரசனையும் சைன்னியத்துடன்கூட அழைத்துக்கொண்டு திக்விஜயஞ்செய்து வருங்காலத்தில் ஒரு கிராமத்தில் பிரபாகர பட்டர் என்னும் பண்டித சிகாமணி, ஆசார்யாளது தெரிசனத்திற்கு ஒரு சிறுவருடன் வந்து நமஸ்கரித்து அடியில் வருமாறு கூறலுற்றார். பகவ! இக்குழந்தை எனது புத்திரன் இவன் பிறந்தது முதல் இதுகாறும் ஒருவரோடும் பேசவில்லை ஒன்றையும் உணரான் உலகவின்பத்தை அவனறியான் உணவும்நாம் கொடுத்தாலன்றி வேண்டான் நான் பலமந்திர ஒளஷதங்களால் இவ்வியாதியைப்போக்கத் துணிந்தும்பயன் பெறவில்லை தமது சரணத்தண்டை அழைத்துவந்தேன் என ஆசாரியாள் அச்சிறுவனை நோக்கி "கஸ்த்வம் சிசோ" என்ற சுலோகத்தைக்கூறினார் அதன் பொருள் யாதெனில் (ஹே குழந்தாய் நீயார்? எங்கு போகிறாய்? உன் பெயர் என்ன இங்கு வருவதற்கு காரணம் என்ன? என்பதே) அதைக்கேட்டவுடன் அவர் மேகத்தின் கர்ஜனையைக்கண்ட மயில்போல் பரமானந்தராய் "நாஹம்மனுஷ்யோநசதேவயக்ஷா:" என்ற ஓர் சுலோகத்தையும் அதன் பிறகு பதினொரு ஆரியாவிருத்தத்தை "நிமித்தம் மனச்சக்ஷுராதி ப்ரவிருத்தென" என்று ஆரம்பித்து கூறலுற்றார் அதன்பொருள் யாதெனில் இந்தலோகத்தின் பிரவிருத்திக்குச்சூரியன் எப்படி நிமித்தமாய் இருக்கிறாரோ அங்ஙனமேமனம்கண் முதலிய இந்திரியங்களினுடைய செய்கைக்குக்காரணபூதமாயிருக்கிற ஆகாசத்திற்கொப்பாய் அகண்டமாய் நித்தியமாய் பிரகாசிக்கும் பரமானந்த சுவரூபமாய் இருக்கிறேன் என்று இத்தகைய அருமையான பொருளடங்கிய சுலோகங்களைக் கூறியவுடன் அவரது தந்தை புத்திரனது புத்திவன்மையைக்கண்டு இவர்மஹாஞானி இப்புத்திரன் எனக்கு உபயோகமில்லை தம்மிடத்திலேயே இருக்கட்டும் என்று கூறிப்போய்விட்டார் உடனே எம்குருமூர்த்தி அம்மஹானுக்கு சன்னியாசதீக்ஷையையளித்து "ஹஸ்தாமலகர்" (உள்ளங்கை நெல்லிக்கனிபோல் ஆத்மாவையறிந்தவர். என்பதுபொருள்) என்ற நாமத்தால் அழைத்தார் அன்று முதல் ஹஸ்தாமலகர் குருமணியோடு சாயைப்போல பரமானந்தராய் சஞ்சரித்தார் இங்ஙனம் அநேக மஹிமையோடு பௌத்தாதிதுர்மதங்களைக் கண்டித்துக்கொண்டு வரும்போது உலகத்தில் ஆசார்யாளது மஹிமைகளைச் செவியுற்ற ஒவ்வொரு மதவாதிகளும் நேரில்வந்து தங்கள் மதத்தை உபேக்ஷித்து பயன்பெற்று ஆசார்யாளது அபிப்பிராயத்தைக்கைக்கொண்டார்கள் இங்ஙனம் இருக்க ஒருபகலில் பாடம் கூறவந்த குருவானவர் தமக்கு பரமப்பிரியரான ஒருசிஷ்யர் வராததைக்கண்டு தாமதித்தாரென அதைக்கண்டமற்றவர், அவர் வந்தும் வராமலிருப்பினும் ஒன்றுதான் என்று அவர்மந்தர் என்பதையும் சாஸ்திரத்தில் பயிற்சியில்லை என்பதையும் அர்த்தத்துடன் தெரிவித்தார்கள் அதைக்கண்டு எம்குருமூர்த்தி மந்தஹாஸத்துடன் சிறிது மௌனமாய் கண்ணை மூடிக்கொண்டிருந்தார் அச்சமயத்தில் அச்சிஷ்யர் கிரிபணி குருவினது வஸ்திரங்களை துவைத்து மடித்து எடுத்துக்கொண்டு ஆசாரியாளது சன்னிதானத்தில் உயர்ந்த பிரசங்கருடன் கூடியதும் மிகப்பெருமையுடையதுமான தோடகவிருத்தங்களால் தோத்திரம் பண்ணிக்கொண்டு வந்து



நின்றார் அதைக்கண்டு மற்றவர்பயந்து நிற்க எம் ஞானநிதி அவரை "தோடக" என்றழைத்தார் அதுமுதல் அம்மஹானுக்கு தோடகாசாரியார் என்று பெயர்வழங்கியது இது நிற்க, ஆசார்யாள காச்யரதேசத்தில் சஞ்சரிக்கும் சமயத்தில் பட்டகுமாரர் என்பவர் பூர்வமீமாம்ஸைசாஸ்திரத்தில் வல்லவராய் பௌத்தாதிமதங்களை அவ்வாசிரியர்களிடத்தில் மாறுவேஷம் பூண்டுபடித்து வெளிவாது அதையெல்லாம் அழியும்படி கண்டித்து பூர்வமீமாம்ஸையை ஸ்தாபித்து எங்கும் கருமமார்க்கத்தைப் பரப்பி வேதவிதியை ஸ்தாபித்து சுப்பிரமணிய அம்சபூதராய் பூலோகமெல்லாம் உலாவி இறுதியில் தாம் பௌத்தகுருக்களிடத்தில் மாறுவேடம்பூண்டு படித்து பிறகு அவர்களையே கண்டித்த குருத்துரோகத்திற்காக பிராயச்சித்தஞ்செய்யத்தீர்மானித்து (துஷாக்னி) (உமியால் மூட்டிய தீ) யில் புகுந்து வருத்துகிறாரெனக்கேள்வியுற்றார் உடனே அங்கு சென்ற சமயத்தில் அவரது பிராணப்பிரயாண சமயமாய் இருந்ததால் அதனைக் கண்டு அம்மஹான் ஆசார்யாளது செய்தியை ஞானதிருஷ்டியால் அறிந்து தனது பிராணனைச் சிலநிமிஷங்கள் நிறுத்திக்கொண்டு ஹே ப்ரபோ! தங்கள் மஹிமையை நான் அறிவேன் எனது அந்திமகாலத்தில் தரிசனம் கொடுத்தது எனது பூர்வபாக்கியமே, தங்கள் அத்வைத மதத்தின் உண்மையை நானறிவேன் ஆனால் தம்மோடு அதிக காலகாசமாய் பேசுவதற்கு காலமில்லை, எனது சிஷ்யர் மண்டனபண்டிதர் என்பவர் காஸ்மீர பட்டணத்தில் இருக்கிறார். அவரோடு தாம்வாதித்து பூர்வமீமாம்ஸையானதைகண்டிக்கும்படி அதுஎனது சம்மதமென்றுகூறிப்பிராணனை இழந்தார். உடனே அங்கிருந்து திரும்பி மண்டனபண்டிதர் கிரஹத்தண்டைவந்து பார்க்கும் கதவு மூடப்பட்டிருந்தது. அதைக்கண்டு தனது சிஷ்யர்களை ஓரிடத்து வைத்து தாம் தனிமையில் குளிகாசித்தியால் ஆகாசமார்க்கமாக அவர் வீட்டுப்புறம் சென்றார். அச்சமயத்தில் அங்கு சிராத்தகாலமானதால் வியாஸரையும் ஜைமுனி பகவானையும் பிராமணராக வரித்து ஹோமத்திற்கு சங்கல்பித்துக்கொண்டிருந்த மண்டனமிச்ரர் இவரைநோக்கி "குதோ முண்டி" (எதற்காக மொட்டை) என்று விதண்டையாக இவரது ஆச்சிரமத்தை பரிஹாஸித்து பேசியதை வியாஸ பகவான் பார்த்து அவரைநோக்கி பண்டிதரே சிராத்த காலத்தில் சன்னியாசி வந்தால் அவர்கள் விஷ்ணுரூபமானதால் அவர்கட்கு பிக்ஷாவர்த்தனஞ்செய்து விஷ்ணுஸ்தானத்தில் வைக்கவேண்டும் அங்ஙனமே செய்யும் எனக்கூற, அங்ஙனமே ஆசாரியரை பிக்ஷைக்கழைத்தார், எம்சங்கரமணி வாதபிக்ஷை வேண்டுமென்றார். உடனே அவர் இப்பொழுது அன்னபிக்ஷை தந்து பிறகு வாதபிக்ஷை தருவேன் என்றார், அங்ஙனமே சம்மதித்து சிராத்தம்முடிந்த உடனே வியாஸரும் ஜைமுனியும் இவ்விருவரையும் வாதத்திற்கு ஏற்படுத்தி மறைந்தார்கள் வாதத்தில் மத்தியஸ்தம் செய்வதற்கு இவர்களைப்போன்ற பண்டிதர்கள் ஒருவருமில்லாததால் யோசிக்க ஆசார்யார் கூறினார், தமது பத்தினி சரஸ்வதியின் அம்சமென்றும் நீர் பிரம்மதேவன் அம்சமென்றும் நானறிவேன், ஆனால் தமது பத்தினியையே மத்யஸ்தமாக வைத்துக்கொள்ளுவோமென, அங்ஙனமே இருவரும் சபையோரும் சம்மதித்து வாதிக்க ஆரம்பித்தார்கள். ஆண்டு அப்பெண்மணி இருவரும் மேதாவிகளானதால் இவர்கள் திறமையையறிவது கஷ்டமெனக்கண்டு இரண்டு பூமாலைகளை அபிமந்திரித்து இருவர் கழுத்திலும் போட்டு எதுவாடுமோ அவரது வாதம்தாழ்ந்தது என்று கூறினார். சங்கரரது மதம் மெய்ஞானமே மோக்ஷசாதனமென்றும் பிரம்மம் ஒன்றேயுள்ளது மற்றது அதனிடத்தில் பொய்யாய் ரஜ்ஜுவின் சர்ப்பம்போல கற்பிக்கப்பட்டிருக்கிறதென்பதாம் பண்டிதரது மதம், கர்மமே மோக்ஷசாதனம் என்பதாம் இவ்

விருவாதங்களும் பதினெரு நாள் பரியந்தம் வாதிக்கப்பட்டன வாதத்தில்
ஸ்ரீ சங்கரர் தளர்ந்தால் மறுபடியும் கிரஹஸ்தராய் விடுவதென்றும் பண்டி
தர் தளர்ந்தால் சந்நியாசியாய் விடுவதென்றும் சபதமிட்டிருந்தபடி. மண்டனி
ன் இறுதியில் அப்பெண்மணி பண்டிதர் நாமிரு வாதியதைக்கண்டு இருவ
ரையும் பிக்ஷைக்கு அழைத்தனள். அதுகண்டு தேவர்கள் புஷ்பமாரி பொ
ழிந்தார்கள் வாத்தியங்கள் கோஷிக்கப்பட்டது. பிறகு மண்டனபண்டிதருக்
கிருந்த சில சந்தேகங்களை நிவர்த்தித்து அவருக்கும் ஸந்நியாஸங் கொடு
த்தனர். பிறகு அப்பெண்மணி எனது நாயகனை வென்றதுமட்டில் உமது
வித்தையின் பெருமைக்கழகன்று என்மோடும் வாதிக்கவேண்டுமென அங்
ஙனமே வாதிக்க எல்லாவித்தையிலும் வல்லிதல் மணியான சங்கரர்
மேன்பட்டதும் அவ்வம்மை மதனசாஸ்திரத்தைக்கேட்க ஆரம்பித்தாள்.
அதை ஆசாரியர் நனவிலும் காணாததால் அதைச்சிலகாலத்தில் கூறுவே
னென வெளிக்கிளம்பி உடனே தனது சிஷ்யர்களுடன் ஓர் பட்டணத்தி
ற்கு போகும்போது அவ்வூர் அரசன் இறந்துவிட்டானெனக் கேள்வியுற்று
தனது சிஷ்யர்களிடத்தில் தனது சரீரத்தை ஓர் ஏகாந்த ஸ்தலத்தில் வை
த்துவிட்டு யோகசாஸ்திர விதிப்படி அவ்வரசனது சரீரத்தில் புகுந்து எழு
ந்தார். உடனே மந்திரி முதலியோர் மகிழ்ந்து உபசாரஞ்செய்தார்கள். அப்
பொழுது ராஜ்ஜிய விஷயங்களை அரசனது பூர்வஞாபகம்போல் நடத்தி
இராக்காலங்களில் அந்தப்புரத்தில் ஸ்திரீகளுடன் காமசாஸ்திரத்தை பயி
ற்சிசெய்து அந்த ஒரு புஸ்தகமெழுதினர். இதைக்கண்ட ஸ்திரீகள் பூர்வ
த்தில் அரசன் மந்தராய் இருந்ததையும் இப்பொழுது மேதாவியாய் இருப்
பதையும் கண்டுநொந்து மந்திரிகளை ரகசியமாய் வரவழைத்து அரசனது
சரீரத்தில் யாரோ மஹானொருவர் ஜீவன்பிரவேசித்திருக்கிறது, அக்குறிகளை
ரொம்பவும் நாங்கள் கண்டோம் என்றார்கள் அதைக்கேட்ட மந்திரிகள்
ஆலோசித்து இம்மஹானின் சரீரம் எங்காவது இருக்குமாயின் அதை எரி
த்து விடுவோமாகில் இச்சரீரத்தை விட்டகையாமல் இருப்பார் என்று
எண்ணி ஏவலாளர்களிடத்தில் பட்டணத்தின் திக்குகளில் எங்காவது சரீ
ரங்கள் ஜீவனின்றி கிடக்குமாயின் உடனே எரித்துவிடுங்கள் என ஆக்
ஞை அளித்தார்கள். அவர்கள் அங்ஙனமேசுற்றி ஓரிடத்தில் இருக்கக்கண்டு
எடுத்து தீமூட்டிவிட்டார்கள். இதைப்பத்மபாதர் முதலிய சிஷ்யர்கள்
சரீரத்திடத்து அநேக நாள் இருந்தும் குருவருகில் வராததால் உடனே
அறிவிப்போம் என பட்டணத்திற்கு சென்று அரண்மனைக்குள் முறவே
டத்துடன் புகுந்து வேதாந்தக்கருத்தமைந்த சுலோகங்களைக்கூறி அதைய
றிந்த எம் அறிஞ சிகாமணி உடனே ஒருவரும் அறியாமல் ஒரு அறையில்
போய் சரீரத்தைவிட்டு வெளிக்கிளம்பி தனது சரீரத்தண்டை போனவு
டன் எரிவதைக்கண்டு உள்ளேபுகுந்து லக்ஷ்மிநரசிம்ம மமதேஹி கராவல
மபம் (ஹே லக்ஷ்மி நரசிம்ம எனக்குக் கரங்கொடு) என்ற வாக்கியத்தை
இறுதியில் வைத்து அநேக சுலோகங்களைக்கூறி நரசிம்ம மூர்த்தியை பிரா
ர்த்திக்க உடனே பிரத்தியக்ஷமாய்க்கையைக் கொடுத்து தூக்கிவிட்டனர்.
உடனே சிஷ்யர்களும் வந்து சேர்ந்தனர். பிறகு சிஷ்யர்களுடன் சரஸ
வாணியென்ற சரஸ்வதியம்மனிடம் சென்று காமசாஸ்திரத்தையும் வென்ற
தும். சரஸ்வதி தேவி பிரம்ம லோகத்திற்கு போவதறகெழுவ பிரார்த்தி
த்து அழைத்துக்கொண்டு சிருங்கேரியில் சாரதாபீடம் ஏற்படுத்தி அங்கு
தேவியை ஆவாகனஞ்செய்து மண்டனபண்டிதருக்கு சந்நியாச ஆச்சிர
மத்தில் சுரேசுவராசாரியர் என்று பட்டங்கொடுத்து அங்கு ஸ்தாபித்து
ஜகன்னாதம் த்வாரகை பிரம்மகபாலம் முதலிய இடங்களில் மடங்கள் ஏற்
படுத்தி அவைகளில் மூன்று சிஷ்யர்களையும் வைத்து எப்பொழுதும் அத்



வைத பிரசாரஞ்செய்துகொண்டு சிஷ்யபரம்பரைகளுக்கு உபதேச
க்கச்செய்து மாதாவின் அந்திமகாலத்தை அறிந்து காலடிக்குச்சென்று மா
தாவிற்கு நமஸ்காரஞ்செய்து பிறகு அநேக இடங்களில் சஞ்சரித்து திக்வி
ஜயஞ்செய்து சர்வஞ்ஞபீடமேறி ஜகத்குருவாக விளங்கியிக்கு அற்புதங்களை
லோகத்திற்குத்தெரிவித்து பதரிகாச்சிரமத்தில் தத்தாத்ரேய குகையிற்
புகுந்து பரமாநந்தசொரூபமாயினர் என்று ஆன்றோர் மூலமாய்நாம் அறிந்தி
ருக்கிறோம் இத்தகைய மஹாகுருவின் ஆராதனமும் நம்மவரிடத்திலுறை
ந்துவிட்டது குருபக்தியே மோக்ஷத்திற்குமுக்கிய சாதனமென்பதை அறிந்தி
ருந்தும் பக்திசெய்பவர்கள் மிக்க அருமையாய் விட்டார்களே அந்தோ! கால
த்தின் கொடுமையே. எச்சமயத்தோரும் குருபக்தியையே முக்கியமாய்க்
கொண்டிருக்கிறார்கள் ஆனதால நாமும் அப்பக்தியைச்செய்து சித்தி முத்
திகளைப்பெறுவோமாக.

---

## ஸ்வதேசியம்

சுதேசிகாள்!

இத்தேசத்திற் பிறந்த நம்மவர் ஏழ்மையைப்பற்றி சிந்திக்கப்புகின்
ஒவ்வொருவர் மனமும் தீயிலிட்டமெழுகுபோல் உருகவேண்டும். உழு
தபயிர்செய்து உண்போர்கள் மழையின்றி ஆகாயத்தைப்பார்த்து சாதகப
க்ஷிபோல், தவித்து நிற்கிறார்கள் துணிநெய்யும் நெசவாளர் சௌராஷ்
டிரர் முதலியோர் தங்கள் வேலையை நிறுத்திவிடத்துணிந்தார்கள் கொல
வர்கள் செம்பட்டறையைக்கட்டிப்போட்டு கன்னத்தில் கையைவைத்துக்கொ
ண்டு தூங்குகிறார்கள் தச்சர்கள் கலப்பைகட்டையும் உண்டுபண்ண
ச்சக்தியற்றுப் போகுங்காலம் வந்துவிட்டதே (சிலைக்கலப்பை மலிந்த
தால்) குயவர்கள், சூளைகளில், கழுதைகளும் நாய்களும், புரளுகின்றன,
லோகவேலைக் காரர்களான கருமார்கள், தங்கள் வேலையிலொப்பமின்றி
நிறுத்திவிடத்தீர்மானிக்கிறார்கள், தங்கவேலைவெள்ளிவேலைக்காரர்களும்,
அங்ஙனமே தீர்மானிக்கிறார்கள். நோக்குங்கால் ஒரு கைத்தொழிலும
நம்தேசத்தில் நடைபெறவில்லையென்றே தோன்றுகிறது தொழிலாளிக
ளெல்லோரும் உடுக்க ஆடையன்றி உண்ண உணவின்றி படுக்கப்பாயின்றி
தங்க இடமின்றிதவித்து (ஓலக்கூடமோ) என்று தலையில் கையைவைத்
துக்கொண்டு அக்கரைச்சீமைக்குப் பிழைக்கப்போனாலும் அங்குவெள்ளை
யர்கள் படுத்தும் இம்சையைப்பொறாமலும் வயிற்றுக்கில்லாக் கொடுமை
யாலும் தமது இனங்களை விட்டுப்பிரிந்த விசனத்தாலும் இறந்துவிடுவோ
மாவென் றுநினைக்கிறார்கள். அந்தோ! நம்மவர் கைத்தொழில்களிலொன்று
கூடவின்றிபோகும் காலம்வந்துவிட்டதே. எங்குகண்டாலும் சீமைத்து
ணிகளும் சீமைப்பாத்திரங்களும் சீமைக்கண்ணாடிகளும், சீமைமருந்து
களும் சீமைமெழுகுவத்திகளும், சீமைச்சாராயங்களும், சீமை அலங்கார
சாமான்களும் சீமை விளக்குகளும் சீமைக்காகிதங்களும் சீமை ஆகாரங்க
ளும், நிறைந்துவிட்டதே நம்மவரிடத்தில் சுவதந்திரமாக ஒரு கைத்தொ
ழிலும், இல்லையே இன்னும்புதிது புதிதாக கண்டுபிடிக்கப்பட்டு வந்து
கொண்டே இருக்கின்றன. இங்கிருந்து பணக்கப்பல்கள் போகின்றன,
அங்கிருந்து சாமான் கப்பல்கள் வருகின்றன. இத்தேசத்து ஏழைகள்
வயிறுவளர்க்கத்தக்கத் திரவியமெல்லாமேற்றிசை கைத்தொழிலாளர்கள்
கொண்டுபோகிறார்கள் கடிகாரங்களுக்கு எவ்வளவுபணங்கள் போகின்றன
நெருப்புப்பெட்டிகட்கு எவ்வளவுபணங்கள் மெழுகுவத்திகட்கு
எவ்வளவு பணங்கள் போகிறது கண்ணாடிகட்கு எவ்
வளவுபணங்கள் மருந்துகட்கு எவ்வளவுபணங்கள்

மற்றும் ஒவ்வொரு சாமான்களுக்காக போகும்பணங்களோ அளவில்லை, அவ்வளவும் நம்தேசத்திலேயே இருக்குமானால் நம்மவருக்குத் தரித்திரம் ஏது? ஒவ்வொரு வீட்டிலும் உள்ளும் புறம்பும் மேலும் கீழும் சீமைச்சாமான்களாகவே இருக்கின்றன. வீட்டின்மேல் ஓடு சீமையெழுத்துகளுடன் அமைந்ததாகவே இருக்கின்றன, ஆணிகளும் அனேகமாய் ஒவ்வொன்றிலும் நான் நான் என்று இங்கிலீஷ் எழுத்துகள் தெரிகின்றன. வெளிப்புறங்களில் வாசற்படி (Gate) சீமை அலங்கார வேலைகளால் அமைக்கப்பட்டிருக்கின்றன. உள்ளே உண்பது சீமைபாத்திரத்தில் குடிப்பது சீமைப்பாத்திரத்தில் படுப்பது சீமைப்படுக்கையில் இருப்பது சீமை விளக்கின் (Power light) பிரகாசத்தில் விளக்கெரிவது சீமை எண்ணெயால், சமைப்பது சீமைஅடுப்பில் நடப்பது சீமைசெருப்பால் (Boots) ஏறுவது சீமைவண்டி உடுப்பது சீமையுடை உண்பது சீமைமருந்து விளையாடுவது சீமைச்சாமான் கையில் வைத்துக்கொள்வது சங்கிலிகளமைந்த சீமைக்கடிகாரங்கள் படிப்பது சீமை புஸ்தகங்கள் அணிவது சீமை நகை குழந்தைகள் ஆடுவது சீமைப்பொம்மை அவர்கள் வளர்வது சீமை ஆகாரத்தால் அவர்கள் படிப்பது சீமைப்பாஷை அவர்கள் நடிப்பது சீமைநடை பழகுவது சீமை ஆசாரம் இங்ஙனம் ஒவ்வொன்றும் சீமையை எதிர்பார்த்தே நாம் பிழைக்க நேர்ந்தது அந்தோ! பித்தளைப்பாத்திரங்களையும் வெள்ளிப்பாத்திரங்களையும் ஆண்டதைப்போல் சீமைமண்ணாகிய இரும்புபாத்திரத்தை (Enamenel), எடுத்தாளும்படி நேர்ந்ததே இத்தேசத்திலிருந்தே அந்நியதேசத்தார் பூர்த்திசெய்ய வேண்டிய பஞ்சுமுதலிய சாமான்கள் போகின்றன அதை அங்கு இயந்திரங்களால் வேலைசெய்து ஒன்றுக்கு ஐந்துபங்கு வாங்குகிறார்கள். புகையிலையை இங்கிருந்து வாங்கிக்கொண்டுபோய் அங்கு இயந்திரங்களால் சுருட்டி அனுப்புகிறார்கள், பஞ்சை இங்கிருந்து கொண்டுபோய் அங்கு நெய்துகொண்டு வருகிறார்கள். சோளத்தை இங்கிருந்து கொண்டுபோய் அங்கு பாலாக்கிக்கொண்டுவருகிறார்கள் கோதும்பையை இங்கிருந்து கொண்டுபோய் பிஸ்கோத்தாய் அனுப்புகிறார்கள். பச்சிலைகளை இங்கிருந்து கொண்டுபோய் மருந்தாய் அனுப்புகிறார்கள். இப்படியே அநேகம் உண்டு. விசாலமான மலைகளும் காடுகளும் நதிகளும் கந்தலோகங்களும் அகப்படக்கூடிய சுரங்கங்களும், உயர்ந்த விருக்ஷங்களும் உள்ள இத்தேசத்தில் நாம்செய்யக்கூடாத சாமான்களொன்றும் அங்கிருந்துவரவில்லை நம்மவர் மேதாவிகளாய் இருந்தும் ஊக்கமும் ஒற்றுமையுமற்று போனதால் இத்தகைய தரித்திரப்படும்படிக்கும் பொன்விளையும் பூமியிற்பிறந்து சறிவினையும் பூமியிலுள்ளோர் கையை எதிர்பார்க்கவும் நேர்ந்ததே மேற்கூறிய பதார்த்தங்களை நம்நாட்டிலேயே செய்தால் நாம் எவ்வளவு லாபத்தை அடையலாம் நம்தேசத்துத்திரவியம் நம்மைவிட்டுப்போகாது நமது ஏழைகள் பிழைக்கவும் வழியுண்டு அந்தோ! எவ்வளவு ஏழைகள் உடுக்கத்துணியற்று உண்ண உணவற்று பிச்சை எடுக்கத்துணிகிறார்கள். மேற்றிசையாரால் மஞ்சட்குரங்கென அவமதித்த ஜப்பான்தேசத்து மேதாவிகளால் இப்பொழுது எவ்வளவு கவுரவம் அடையப்பட்டிருக்கிறது. பூர்வம் அனுமானைப்பரிகசித்த ராவணனும் இலங்கையும் பட்டபாட்டைப்போல் மேற்றிசையிற்சிலர் அடையநேர்ந்ததன்றோ இத்தேசமானது ஆதிகாலம் தொட்டு நாகரீகத்திலும் செல்வத்திலும் மேதையிலும் மேம்பட்டதென்று எல்லோரும் அறிவார்கள் பூர்வீகர்கள் இகலோகத்தை பொய்வாழ்க்கை என மதித்து பரலோகவாழ்க்கைக்குறிய தெய்வீகப்பிரமாணகாரியங்களில் பிரவேசித்து ஈடுபட்டவர்களாய் இருந்தார்கள். அங்ஙனமிருந்தும் அப்பொழுதிருந்த நம்நாட்டு கைத்தொழிலும் சிற்பவேலைகளும் நாகரீ



கமும் செல்வமும் மெச்சத்தக்கதே அப்பொழுது இங்கிருந்து அயல்நாட்டுகளுக்கு வந்தமைதியும் உண்டு நாம புலிகட்குப்பிறந்து பூனைகளானோம் என்ன செய்வது இனியாவது அந்நியதேசத்தாரைப் பார்த்தாவது கைத்தொழிலை அபிவிருத்தி பண்ணிக்கொள்ளவேண்டும். இந்தியவதியான நமது தாயின் பூர்வகுமாரர்கள் இருந்த செல்வத்தை, அவளுக்கே அர்ப்பணம்பண்ணினார்கள் நாம அந்நியதேசத்திற்குக் கொடுக்கத்துணிந்தோம் இக்காலத்தில் நம்தேசத்திற்கு நேர்ந்த தரித்திரத்தைப்போல எப்போதும் நேர்ந்ததில்லை பூர்வத்தில் நமது மூதாதைகள் ஊக்கமும் நோக்கமும் கொண்டு உழைத்து செல்வத்தை அபிவிருத்தி செய்தார்கள் முன்காலத்தில் தங்கப் பொடிகளாகவாக திரட்டி புதைத்துவைத்தவை இப்பொழுது அநேக இடங்களில் அகப்படுகின்றன காலாகாலத்தில் மழைபெய்ததால் ஏராளமான தானியங்கள் விளைந்தன அரசர்களும் இக்காலத்தைப்போல் நாட்டுவரி, ரோட்டுவரி, வீட்டுவரி, காட்டுவரி, கோட்டுவரி, மாட்டுவரி, சீட்டுவரி, போட்டுவரி, தண்ணீர்வரி, கண்ணீர்வரி, கூலிவரி, தாலிவரி, தலைவரி, மலைவரி, கலைவரி, விலைவரி, கதவுவரி, புத்திவரி, தொழில்வரி, உப்புவரி, முதலிய வரிகளைப்போடாமல் குடியமட்டும் சௌகரியமாகவே வாங்கினார்கள் மற்றும் மலைச்சாரல்களில் தாம்பிரப்பொடிகளும் வெள்ளிகளும் தங்கங்களும் ஏராளமாய்க்கிடந்தன காடுகளில் உண்டாகும் வாசனை வஸ்துக்களால் எவ்வளவோ திரவியம் கிடைக்கும், அரசர்கள் குடிகளின் பொருட்டு ஆபத்துதனமாக தேவாலயங்களில் புதையல் வைத்துவைப்பது வழக்கமுண்டு முற்காலத்துபட்டிகள் இருவடி சேர்த்துவைத்த திரவியங்கள் இக்காலத்து அதிகசெல்வியானபோர்களுக்கு இன்னும் கிடைக்கின்றனவன்றோ முற்காலத்தில் கலம் 6-அணா விற்றது எல்லாசாமான்களும் மெத்தமலிவாய் கிடைத்தன எவ்வகையிலும் நம்தேசத்துத் திரவியங்கள் நம்தேசத்திலேயே இருந்தன ஒருபோதும் வயிற்றுக்கில்லாமல் நம்மவர் தரித்திரப்படவேயில்லை. ஆனதால் இப்பொழுது தரித்திரம் வந்ததற்குக்காரணம் நமுடைய ஊக்கக்குறைவேயன்றி மற்றவர்மேல் கூறுவதிற்பயனில்லை மேற்றிசைமேதாவிகளால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் நாகரீகமான நாமும் தெரிந்துகொண்டுசெய்யலாம்.

வரும்,

வந்தே மாதரம்.

## யோகி போகி சம்வாதம்.

மந்த ஹாஸமும் மனஅடக்கமும் உள்ள ஓர் யோகியானவர் ஓர் விருக்ஷமூலத்தில் உட்கார்ந்துகொண்டு அடியில் வருமாறு சிந்தித்தார்.

ஆ! இந்தப் பிரபஞ்சமானது துக்கமாய் இருக்கிறதன்றோ எங்கு சென்றாலும் பிராகிருத குணங்களமைந்த சம்சாரவார்த்தைகளே காதிற்படுகிறது எல்லோருக்கும் உலகசம்பந்தான வார்த்தையைக் கேட்பதிலேயே, ஆவல் இருக்கின்றன இந்திரியங்களால் உண்டாகும் சப்தஸ்பர்சாதிகளான அற்பசுகத்தை அடைவதிலேயே, மோஹித்திருக்கிறார்கள் எங்குகண்டாலும் ஸ்திரீமயக்கமே மலிந்திருக்கிறது காமனென்கிற வேடனால் மனிதனென்னும் பறவையைப்பிடிக்க விரித்தவலைக்கொப்பாக இருக்கும் மாதர்களால்யாதுபயன் நமது சரீரத்தைப்போலேயே இரத்தமும் நரம்பும் சீயும் மலமும் நிறைந்தே இருக்கிறது காமக்குரோதாதிகள் நிறைந்தகுடிக்கைபோல் இருக்கிறார்கள் அந்தோ! ஸ்திரீமயக்கால

ரோ? உலகத்தில் பிறப்பென்னும் பெரும்பிணிக்கு இடமாயிற்று. அநே
கவித ஸ்திரீகட்கு புருஷர்களிடத்தில் மோஹந்தலைவரோ இச்சம்சாரம்
என்ற நதிப்பிரவாகம் ஓடுகிறது காமமென்கிற வேட்டை ஸ்திரீபுருஷர்கள்
என்கிற பக்ஷிகளுக்கு காமமென்கிற சாராயத்தை ஊட்டி அங்கும் இங்கும்
அலையச்செய்கிறனன்றோ பரஸ்பரம் ஒருவருக்கொருவர் மோஹத்தால்
இணங்கி புத்திரபரம்பரை என்றகொழுமையைவளர்க்கிறார்கள் கர்மமென்னும்
கட்டுடிதத்தோருக்கு ஸ்திரீமயமானபதுமையை சோகமென்னும் மோஹமென்
னும் மயக்கமேறி தவிப்பதைக்காண்கிறோம் இம்மோஹமானது இந்தி
ராதி தேவர்களையும் விடவில்லையா ஜீவராசிகள் (பராஞ்சி காநிவ்யத்ருணத்
ஸ்வயம்பூ: தஸ்மாத பராங்பச்யதி) பிரமமாவனவர் இந்திரியங்களை
வெளிமுகமாக சிருஷ்டித்திருக்கிறார் ஆனதால் வெளிப்புறத்தையே பார்
க்கிறது என்ற சுருதிப்பிரகாரம் இந்திரியங்களான குதிரைகளை ஜீவனெ
ன்கிற மூடச்சாரதியை காமாதிகளான கரடுமுரடான பாதைகளில் இழு
த்துக்கொண்டு போகின்றன. இதுகண்ட மாயமானவள் காமிகளையும்
மனக்குரங்கு காலிட்டோட அதன் பிறகே ஓடும் மதாழ்வார்ப்பயனுள
ரோ, என்றார் ஸ்திரீபுருஷர்களின் சேர்க்கையாலாகும் அற்ப ஆனந்தத்தில்
மயங்காத ஜீவராசிகளில் காமினீ புருஷர்களமத்தால் ரத்தமும் தோலும்
நரம்புமமைந்த ஸ்திரீ என்ற கூட்டைப்பார்த்து முகத்தை சந்திரபிம்ப
மென்றும் வர்ணிக்கிறான் ஸ்திரீகளின் ஒவ்வொரு அங்கங்களையும் ஒவ்
வொரு உயர்ந்த வஸ்துக்களாக வர்ணித்து பூர்த்த முலைகளைகண்டு அதனை
த்தின்வழியின் சுழலால் மயக்கப்பட்டு அவளுக்கண்டவுடனே அவளது ஒவ்
வொரு அங்கங்களையும் தியானித்து காமமெனும் அக்கினியால் தகிக்கப்
பட்டு போகமெனும் தப்பிரஜனிகொண்டு ஒவ்வொருநாளும் மயங்கித்திரி
கிறான் அந்தோ இவ்வியாதி அநாதிகாலமாக ஜீவராசிகளைத்தொடர்ந்து ஆடி
க்கொண்டிருக்கிறதே என்று சிந்தித்து வாயாற்புலம்பிக்கொண்டிருந்
தனர்.

இந்த அண்டையில் நின்ற ஒரு போகியானவன் பார்த்து கூறு
கிறான்.

ஓய் உமக்கேன் இந்தபால்யத்திலேயே இப்படி ஸ்திரீயினிடத்தில் வெறு
ப்புவரவேண்டும் என்னுடைய படிபேதங்கிரீர் உமது யௌவனத்தை ஏன்
கெடுத்துக்கொள்ளுகிறீர் ஆஹா! ஸ்திரீ இன்பமே இன்பம். அவள் உதட்
டில் அமிருதத்தைப்பானம் பண்ணுவதால் உண்டாகும் ஆனந்தத்தை
அறியாதவன் மூடனன்றோ இவ்வுலகத்தில் சுகமென்பது ஸ்திரீபுரு
ஷர்களது சேர்க்கையாலேயே உண்டாகிறது ஆ ஆ அந்த ஆனந்தமே
ஆனந்தம் அவளது குயிலின் தொனிபோன்ற வார்த்தைகேட்கும்பு,
தான் காது எவ்வளவு சுகத்தை அனுபவிக்கிறது ஸ்திரீயினது சரீரத்தைக்
காண்பதால் கண் எவ்வளவு குளிர்ச்சியடைகிறது அவளது சரீரத்தின்
ஸ்பர்சத்தால் துவகிந்திரியத்திற்கு எவ்வளவு ஆனந்தம் உண்டாகிறது.
ஸ்திரீ அங்கஸ்பர்சத்தால் உண்டாகும் ஆனந்தமே ஆனந்தம் அதுவேமோ
க்ஷம் கடன்பட்டாவது ஸ்திரீ இன்பத்தை அனுபவியாதமூடன் நரகத்
தையேயனுபவிக்கிறான் குழந்தைகளின் மதலைச்சொல்லை கேளாச்செவி
இரும்புக்கொப்பானவே "குழலினிதுயாழினிது என்பார் தம்மக்கள் மழ
லைச்சொற்கேளாதவர்" என்றார் திருவள்ளுவரும். பிரகிருதியின்
இயல்பை வெல்பவர் யார் ஹே மூடா உம்மைப்போல் பிஞ்சில் பழுத்த
வெம்பலை நான் கண்டதே இல்லை. (அண்டையிலிருந்த ஓர் பெண்ணைப்
பார்த்து) கண்ணாய்! இந்த மூடனைப்பார்த்தாயா இவன் பேதமைகேட்
டாயா என்றான்.



(பெண்) நாத அவன் (அபாவேவிரக்தி) என்பதுபோல் அப்படிச்
சொல்றான்.

என்னைப்போலே ஒத்திகையில் வசப்படாத புருஷன் ஏது, இப்
படி உளறுகிறவனை எத்தனைபேரையே நான்பார்த்திருக்கேனே நம்ப அடு
த்தாத்து கிட்டன் இப்படித்தான் சொல்லிக்கொண்டிருந்தான் கடைசி
யில் செட்டித்தெரு கண்மெரட்டிமுண்டை மயக்கத்தில் ஆப்பட்டு முழிக்
கில்லையா?- ஆப்படாதபோது அப்படித்தான் சொல்ரவழக்கம், "ஓய் அழு
மூஞ்சி" உமக்கு எந்த ஊர் இஞ்சை எங்கேவந்து ஒக்காந்து இருக்கிறீர் உம
க்கு ஒத்துருார் இல்லையோ என்றாள்.

யோகி: இதென்னசம்பில் மாட்டிக்கொண்டேன் ஆனாலும் இவர்
களுக்கு கொஞ்சம் உபதேசித்துப்பார்ப்போம் ஐயா! நீர் சொல்வது வாஸ்
தவமே உமது அனுபவத்தைக்கூறினீர் உலகத்தின் இயற்கை அப்படித்
தான் இருக்கிறது யாட்டிற்கும் மனுஷியனுக்கும் வித்தியாசமில்லையா,
மனுஷியன்பகுத்தறியும் ஞானமுடையவனன்றோ உலகத்திலுள்ள ஜீவ
ராசிகளில் மனுஷியன் சிரேஷ்டனன்றோ இவ்வுலகத்தில் ஸ்திரீ இன்ப
த்தை பெரிதாக நினைத்தனுபவித்தவரெல்லாரும் எவ்வளவு நாள் வாழ்
ந்தார்கள், அவரவர்கள் மின்னல்போன்ற வாழ்வையடைந்து செத்துக்
கொண்டே இருக்கிறார்கள். (ஸ்வாத்மாவேயோதஹ்ஸ்த; குணபசரீராபிமா
னைவ தவ்டா? வாரிஜபுர்புதாகாரம் குர்வந்திமோஹமபக்ஷிதக:) என்ற
படி சரீரத்தின் காரணமாயிருப்பதும் இச்சரீரத்தில் நான் என்பதற்கு
ஆதாரமாய் இருப்பதும் ஜடப்பொருளல்லாததுமான ஆத்மாசொரூபத்
தின் ஞானமில்லாத மூடர்கள் பிணம்போலிருக்கிறசரீரத்தில் அபிமான
முள்ளவர்களாய் நீர்மேல் இருக்கிற குமிழிகளை ரக்ஷிப்பதுபோல் இச்சரீ
ரத்தை ரக்ஷிக்கிறார்கள். இச்சரீரமே அநித்தியமாயிருக்கும்போது இதி
லுள்ளபோகம் நித்தியமா? நரம்பும் எலும்பும் நிறைந்த, பெண்ணிடத்
தில் என்னசுகமிருக்கிறது அதில் சுகமே இல்லை மோகத்தால் துக்கத்தை
சுகம் என்றும் எண்ணிமயங்குகிறீர்கள் விசாரிக்குமளவில் ஸ்திரீக
ளுக்கு புருஷனிடத்திலென்ன சுகம், பரஸ்பரம் மோகத்
தாலேயே சுபுத்தி உண்டாகிறது ஸ்திரீசரீரத்தையும் புருஷசரீரத்தை
யும் பகுத்தறியாத குறைவினாலேயே பரஸ்பரம் சுகமென்று எண்ணப்ப
டுகிறது பகுத்தறிந்தால் சுகம் என்று எண்ணினது துக்கமாகவே முடியும்
சுகம் என்றால் பூதபவிஷ்யத் வர்த்தமானமென்ற முக்காலத்திலும் சுகமா
கவே இருக்கவேண்டும் சுகமென்பது புருஷனது சுபாவமா? அல்லது ஸ்தி
ரீயின் சுபாவமா? ஸ்திரீயின் சுபாவமாயின் புருஷனை அபேக்ஷியாமல்
அவளே சுகத்தையனுபவிக்கவேண்டும் புருஷனது சுபாவமானால் அவ
னும் ஸ்திரீயை அபேக்ஷியாமல் அவனுக்கே உண்டாகவேண்டும். அங்ங
னம் உண்டாகவில்லை ஆனதால் சுகமென்பதே இல்லை என்கிறேன் என்
னசொல்லுகிறீர்.

போகி:— நண்ப உமது விசாரணையை நிறுத்தும் உலகமுழுதனும்
சுகமென்றெண்ணியிருப்பதை நீர் சுகமில்லை என்றால் யார் கேட்பார்கள்
சுயின்டிகாணம் சாப்பிடுவன் இருக்கிறபோது செத்ததுபோய் என்று
சொல்லுவதுபோல் இருக்கிறது நான் சுகமாய் அனுபவித்துக்கொண்டி
ருக்கிறபோது நீர் இல்லை என்று கூறினால் நான் நம்புவேனா ஆ ஆ அந்த
சுகமே சுகம் புருஷனிடத்திலதனியாகவும் இல்லை, ஸ்திரீயினிடத்திலும்
இல்லை அதை அனுபவித்தால் தான்தெரியும், உமக்குத்தெரியாது போம்
போம் உமக்குப்பயித்தியம் பிடித்திருக்கிறது,

யோகி: நண்ப நான் சொல்லுவதைக்கேள் உலகத்தில் நாடிபார்த்
தாலும் சுகமில்லை எல்லாம் கனவைப்போல் பொய்யாய்த்தோன்றுகிறது வர்

வெளியாயியாய் நிறைந்து ஆகாசம்போல் எங்கும் வியாபித்து எப்போதும் நித்தியமாயும் ஆனந்தமாயும் பூரணமாயும் இருக்கிற பரமாத்மாவே சுகமாய் இருக்கிறார் அவரை அடைவதே நித்தியசுகம் அவரது சுகமே உலகத்தில் உள்ள அல்பசுகங்களாக அனுபவிக்கப்படுகிறது (ஏதஸ்யைவ ஆனந்தஸ்ய அந்யானி பூதானி மாத்ராமுபஜீவந்தி,) என்றபடி அந்தப்பரமாத்மனுடைய, ஆனந்தமே அல்பமாக இந்திரியங்களால் அனுபவிக்கப்படுகிறது, நிருவிகாரத்தைக்கேள் நீ தூங்கும்போது உனக்கு எப்படி இருந்தது.

போதி.— அப்பொழுது எனக்கு ஒன்றும் தெரியவில்லை என்ன மோசகமாய் இருந்ததுபோல தான் தோன்றுகிறது என்ன விநோதமோ, வெல்லாம் பேசுகிறீயே பட்டிக்கோட்டைக்குடியில் என்னை மறுவும் கொட்டைப்பாக்கு முப்பத்திரண்டு என்பதுபோல பிரத்தியக்ஷமான இந்த லோகசுகத்தைவிட்டு பரமாத்மாவானது அது சுகமாய் இருக்கிறதென்று இந்த லோகவேதாந்திகளென்னும் பைத்தியங்கள் பிதற்றிப் பேசுகிறபேத்தலன்றோ.

வரும்.



ஸ்வாமி விவேகானந்தர்.

இப்பெரியாரின் சரித்திரங்களும் உபந்யாசங்களும் பிந்தி வெளியிடப்படும்.



# நசிகேதஸ்

பிராமணிய ஆசிரமகோஷ்டையிலிருந்த பூர்விக ரிஷிபுத்திரர்களின், சரித்திரங்கள் வேதத்தில், ஆங்காங்கு, காணப்படுகின்றன. அவைகளில் நசிகேதஸ் என்ற ரிஷிபுத்திரர் சரித்திரமும், ஒன்று இவரது சரித்திரத்தால், ரிஷிபுத்திரர்களது பெருமையையும், தைரியமும், மேதையும், ஞானத்திறமையும், பிதிருபக்தியும், அவர்கள் மேன்மேலிருந்ததோன்றும்போதே பஹுமத்தினை. ஈசுவரதத்துவத்தையுடைய விநயத்தையும், சுத்தஸாத்விக குணமே பகிர்ந்த தன்மையையும், வைராக்கியத்தையும் மற்றும் அநேக விஷயங்களையும் அறியலாம்.

## இது எஜுர்வேதத்தின் கடசாகையிலுள்ளது.

பூர்வத்தில் வாஜுசிரவஸ்ஸென்ற ஒரு மஹாரிஷி இருந்தார். இவர் அன்னதானத்தில் மிக்க சிரத்தையுள்ளவர், வேதத்தில் உள்ள தருமங்களை அனுஷ்டிப்பவர் மிகப்பண்டிதர்; இவருக்கு நசிகேதஸ் என்ற ஓர் புத்திரர் இருந்தார், அப்புத்திரனது 15-வயதுக்குட்பட்ட சரித்திரமே இப்பொழுது தெரிவிக்கப்படுகிறது— வாஜுசிரவஸ் என்பவர் ஓர் யாகத்தைச்செய்தார். அந்த யாகத்தில் ருத்விக்குகளுக்கு (யாகத்தை நடத்துகிற பிராமணர்கள்) தக்ஷிணை கொடுக்கும்போது லோபத்தாலோ தரித்திரத்தாலோ இந்திரியங்களெல்லாம் சுருங்கியதும், பால் கொடுக்கக்கூடாததும் லோகத்தில் மேயவேண்டிய புற்களை மேய்ந்ததுமான கிழப்பசுக்களைத்தானம்பண்ணினார். அதைக்கண்ட நசிகேதஸ் (தனது பிதாவைப்பற்றி அடியில் வருமாறு சிந்திக்கிறார்.) எவர் யஞ்ஞத்தில் உபயோகமற்ற பசுக்களைத்தானம்பண்ணுகிறார்களோ அவர்கள், ஆனந்தமற்ற இருட்டுலோகங்களை அடைவார்கள் என்று நாம் கேள்விப்பட்டிருப்பதால் இதை நமது பிதாவினிடத்தில் தெரிவிக்கவேண்டும், நம்மைக்கொடுத்தாவது இந்த யாகத்தின் உத்தமமான பலனை நமது பிதா அடையலாம். என்று கருதி பிதாவைப்பார்த்து, ஐயா? என்னை எவருக்குக் கொடுக்கப்போகிறீர்? என்று மும்முறை பிரார்த்தித்தனர், அதைக்கேட்டுத்தந்தை கோபத்துடன், உன்னை மிருத்யுவுக்குக் கொடுக்கிறேன் என்றார். அதைக்கேட்ட குமாரன் ஏகாந்தத்திலிருந்து சிந்தித்து, அடியில் வருமாறு துக்கித்தார். நானது பிதாவினிடத்தில். அநேகம்பண்ணுகிற சிஷ்யர்களில், நானே முதல்வனாய் இருக்கிறேன். அநேகமே அநேக புத்திரர்களில், நானே ஜேஷ்ட புத்திரன், வித்யாவிஷயத்தில், ஒருக்கால் நான் மத்திமமானவனாயிருந்தாலும் இருக்கலாம், அதமனல்ல; இத்தகைய குணமுடைய என்னை எதற்காக மிருத்யுவுக்குக் கொடுக்கிறேன் என்று பிதாகூறினார். அந்த மிருத்யுவால் [illegible] அடையக்கூடியவையாது. ஒன்றுமில்லை நிச்சயமாய் [illegible]

நமது பிதா கோபத்தினாலேயே என்னைக்காலனுக்குத் தத்தம் பண்ணினார், ஆனதால், நாம் இப்பொழுது செய்யவேண்டுவது என்னவெனில் நமது பிதா கோபத்தாற் கொடுத்திருந்தாலுங்கூட அவரது வாக்கைப்பொய்யாக்காமல், நான் மிருத்தியுவினிடத்தில் போகவேண்டும், என்று சிந்தித்து (நாம் யாது இங்ஙனம் பிதாவிற்கு கோபத்தை மூட்டினோம்) என்று மறுபடியும், பிதாவைப் பார்த்து, ஹே, பெருந்தகையே! பூர்வத்தில் தங்களுடைய பிதா பிரபிதாமகரென்பவர்களுடைய சரித்திரங்களைப்பாருங்கள், அதைப்பார்த்து, இப்பொழுது தாங்கள் நடக்கவேண்டும். இன்னும் மற்ற சாதுக்கள் எப்படி நடக்கிறார்களோ அதையும்பார்த்து ஆலோசியுங்கள், (அவர்களிடத்தில் பொய்யைக்கூறினார்கள் என்ற சரித்திரமில்லை,) "பொய்சொல்லிய ஒருவன் தேவனாகான்" இன்னும் வயலில் உள்ள பயிரைப்போல் மனுஷியர்கள் உண்டாகிறார்கள். அதைப்போலவே மறுபடியும் மடிகிறார்கள். அதைப்போலவே மறுபடியும் உண்டாகிறார்கள். ஆகையால் இத்தகைய அநித்திய சரீரத்தை இரக்ஷிக்கப்பொய் சொல்லுவது கூடாது. என்றைக்கிருப்பினும் இறப்பது திண்ணமே, ஆனதினால் என்பொருட்டு நீர் விசனப்படவேண்டாம், மிருத்தியுவிக்கு கொடுக்கிறேனென்று கூறி, கொடாமல் இருக்கவேண்டாம். உடனே என்னை மிருத்தியுவினிடத்தில் அனுப்புங்கள் என்று கூறினார் அதைக்கேட்ட பிதா தனது வாக்கின் சத்தியத்தைக் காப்பாற்றும் பொருட்டு தனது புத்திரனை மிருத்தியுலோகத்திற்கு அனுப்பினார். (யோகசாஸ்திரத்திற்கூறியபடி ஸூக்ஷ்மசரீரத்தையே அனுப்பி இருக்கவேண்டும்) அவரும் மிருத்தியுவினுடைய கிரகத்திற்சென்று அவர் வீட்டில் இல்லாததால் மூன்று நாள் ஆகாரமின்றி இருந்தார் அப்பொழுது வெளியிற்சென்று, இருந்த, மிருத்தியுகிரகத்திற்கு வந்தவுடன் அவரது பத்தினிகளும் மந்திரியும் அவரைப்பார்த்துக்கூறுகின்றார்கள் ஹேநாதா, நமது கிரகத்தை அதிதியாகிய ரிஷிபுத்திரனது வைசுவாநராக்கினியானவர் (பசியின் அக்கினி) எரிக்கிறார்போல் தோன்றுகிறது ஆனதால் அவரது பசியையும் தாகத்தையும் உடனே சமனம்பண்ண வேண்டும் அவருக்கு அர்க்கிய பாத்ய ஆசமனாதிகளை கொடுங்கள் அங்ஙனம் கொடாவிடில் எந்த அற்பபுத்தியுள்ள மூடனது கிரகத்தில் அதிதியானவன் ஆகாரமின்றி இருக்கிறானோ அவனது தெரியாமல்வரக்கூடிய பலனைத்தும் தெரிந்துவரக்கூடிய ராஜ்ஜியாதிபிராப்திகளும் பிரியவார்த்தைகளாலும் இஷ்டாபூர்த்திகளாலும் வரக்கூடிய அபூர்வாதிபலன்களும் புத்திரபசுக்களும் நசித்துவிடும் என்று அறிந்திருப்பதால் நாம் அதிதிகளை உபேக்ஷிக்கக்கூடாது என்று கூறினார்கள் அதைக்கேட்டு மிருத்தியுவானவர் அவரிடத்திற் சென்று வினயத்துடன் பூஜைகளைச்செய்து ரிஷிபுத்திர! பூஜார்ஹரான நீர் எனது கிரகத்தில்



மூன்று நாள் ஆகாரமின்றி வசித்தீரன்றோ நமஸ்கரிக்கிறேன் ஹே பிராம்மணரே? தமது அனுக்கிரகத்தால் எனக்கு மங்களம் உண்டாகட்டும் எனது அபராதத்தைக்ஷமிக்கும் பொருட்டு என்னிடத்தில் மூன்று வரன்களைகேட்டுக்கொள்ளும் என்றார் அங்ஙனம் கூறியவுடன் இச்சிறுவர் வரன்களைகேட்டனர் யாதெனின் ஓமிருத்தியோ?

1. பூலோகத்திலிருக்கும் எனது பிதா சாந்தராய் இயமலோகத்திற்குச் சென்ற எனது புத்திரன் என்னசெய்கிறானோ என்று விசாரப்படாமல் இருக்கவேண்டும். நீர் இங்கிருந்து என்னை அவரிடத்து அனுப்பியவுடன் இவன் எனது புத்திரனென, அவர் தெரிந்துகொள்ளவேண்டும் இந்தப்பிரயோஜனமே, தாங்கள் கொடுக்கும்வரனில் முதல்வரனும் உடனே மிருத்தியுவானவர் கூறுகிறார். உமது பிதா விசாரமில்லாதவராய் ராத்திரியில் செவ்வையாய் நித்திரை செய்வார். இயமனிடத்திற்சென்ற நமதுபுத்திரன்யாது செய்கின்றானோவென; விசாரத்தையடையார். என்னிடத்திலிருந்து நீர் அங்கு போனவுடன் உம்மை தனது புத்திரனென அறிந்துகொள்ளுவார் என்றார். உடனே இரண்டாவது வரனைக்கேட்டார் யாதெனில்.

நசிகேதஸ் பகவ, ஸ்வர்க்கலோகத்தில், ரோகாதிகளால் பயம்கொஞ்சமுங்கூட இல்லை, அந்த இடத்தில் உமது பிரவேசத்தால் தேவர்கள் நசிப்பதில்லை, (இந்தலோகத்தில் கிழத்தனம் வந்துவிட்டால் ஜீவர்கள் இறந்துவிடுவோமே, என்றுபயப்படுவதுபோல்) அங்குபயமில்லை, மற்றும் பசிதாகமின்றி எப்பொழுதும் சுகியாகவே சோகாதிகளின்றி இருப்பார்கள் இத்தகைய லோகத்திற்கு போவதற்குச்சாதனமாய் இருக்கப்பட்ட அக்கினியை நீர் அறிவீர் அதை சிரத்தையோடு கூடியிருக்கப்பட்ட எனக்குச்சொல்லவேண்டும், அவ்வக்னியைத் தெரிந்துஹோமம் பண்ணுகிறவர்கள் சரீரம் இறந்தவுடன், தேவலோகத்தையடைந்து ஜராமரணமின்றி வெகுகாலம் வாழ்வார்கள் என்று கேழ்வியுற்றிருக்கிறேன் என்றார்.

இங்கு அறியவேண்டியவை உண்டு அக்னியை அறிந்து ஹோமம் பண்ணுவதால் சுவர்க்கலோகத்திற்கு எப்படிப்போக முடியுமெனில் அவ்வக்னியில் வேதத்தில் கூறியிருக்கிற விதிப்படி ஹோமம்பண்ணி தேவதைகளுக்குத் திருப்திசெய்வித்தால் அக்கர்த்தாவின் சூக்ஷ்மசரீரத்தில் சிற்சில ஸம்ஸ்காரங்கள் உண்டாகின்றன அதற்கு அபூர்வம் என்றுபெயர் அவ்வபூர்வ சக்தி அவ்வக்னியின் ஹோமத்தாலேயே உண்டாகின்றது. அநேக பதார்த்தங்களைச்சேர்த்து ஹோமஞ்செய்யும்போது நிஷ்டையுடன் ஏகாக்ரசித்தத்துடன் சுவர்க்கலோகத்திற்போய தேவனாகவேண்டும் என பலமுறை நினைப்பதாலும் அநேகாகளும் அவன் சன்னிதானத்தில் கூறுவதாலும் ஒரேகாலத்தில்

அநேகர்கூடி ஒருவன் சுவர்க்கலோகத்தில் தேவனுவதற்கென்றே ஹோமம்பண்ணுவதாலும் அக்கர்த்தாவின் மனதில் தனக்கு தேவத்துவப்பிராப்தி வந்துவிட்டதாகவே பதிந்துவிடும் அப்பொழுது அவனது மனோமயகோசத்தில் ஒருவித மனுஷியத் தன்மையின்குணங்கள்மாறி தேவதன்மைக்கு வேண்டிய குணங்களிற்சிலது விருத்தியாகிறது.

(வரும்.)

## பிரபஞ்ச நாடகம்.

முற்காலத்தில் நடந்தேறிய சரித்திரங்களையும் வித்வான்கள் தங்கள் வித்வத்திறமையால் அமைப்பித்த கதைகளையும், இரவு நேரங்களில் நாடகமாடுவோர்களால் நடித்துக்காட்டப்படுகின்றன. நாடகமாடுவோர்களுக்கு தங்களது மனதில் எவ்வித உற்சாகமோ துக்கமோ இருப்பினும், அவர்கள் தாங்கள் கொண்டவேஷத்திற்கிணங்க, சமயோசிதமாக உற்சாகக்குறிகளையும், துக்கசம்பவங்களையும் பார்ப்பவர் பிரமிக்கும் வண்ணம் நடித்துக்காட்டி, முடிவில் அவ்வேஷத்தைக்களைந்துவிட்டு, பழைய நிலைமையிலேயே இருக்கக்காண்பது அதிசயமல்ல. இவ்வுலக அமைப்புகளும், மேற்காட்டிய நாடகத்திற்கொத்ததேயன்றி சாசுவதமானவைகளல்லவென்பது அனுபவசித்தமாகும். அரசனுக்குப்பிறக்குங்குழந்தையும் தாழ்ந்த நிலையிலுள்ள தோட்டிக்குப்பிறக்குங் குழந்தையும், பிறக்கும்பொழுது ஒரே தன்மையுடனும் நிர்வாணத்துடனும் ஞானசூனியத்தோடு தான் ஜனிக்கின்றன அரசனுக்குப்பிறந்த குழந்தை அரசனாகும் தோட்டியின் குழந்தை தோட்டித்தொழில்செய்து ஜீவிப்பதுவுஞ்சுபாவமேயாயினும் ஒவ்வோர் ஸமயங்களில் அதற்கு விரோதமாகவும் நடப்பதுண்டு நமதுகண்முன்பாக காணப்படும், பெருந்தனிகர்களிற் பலர், மிகுந்த ஏழ்மை நிலையிலிருந்திருப்பார்கள் தற்சமயம் ஏழைகளாக விருத்துவருந்துவோரிற்பலர், பெருந்தனிகர்களாக இருந்தவர்களாகவுமிருப்பார்கள் தந்தைப்பன் பிட்சையெடுத்து மெய்வருந்திச் சம்பாதித்த தனத்தால் படித்துத்தேர்ந்த பற்பல ஏழைகள், இயாவரும் பணிந்தேத்தும் பெரும்உத்தியோக பதவியிலிருக்கக்காண்பது அதிசயமல்ல. மாஜிஸ்ட்ரேட் அதிகாரியாகவிருந்து பலரைத்தண்டனைக்குட்படுத்தியவர்கள், தாங்கள்செய்த குற்றத்திற்காக தண்டிக்கப்பட்டு சிறைச்சாலைக்கேகுவதும் சம்பாவிதமே வக்கீல்களாகவிருந்து நியாயவாதஞ்செய்து அன்னியர் வழக்குகள் ஜயிக்கப்பெரும்புகழுடையோர், தாமேவழக்காளியாகி மற்றொரு வக்கீல் உதவியை நாடிக்காத்திருப்பதும் வழக்கமேயல்லவா, இன்று அரசராகவிருப்போர் நாளை குற்றவாளியாகி, சிறையிலிருப்பதுஞ்சுபாவமே, மேற்காட்டியவாறு இவ்வுலக இன்பதுன்பங்கள் ஸ்திரமற்றதாகவும் ஒருவருக்கொருவர் நிச்சயமில்லாத தாகவுமிருக்குமானால், நாடகத்திற்கும் இவ்வுலக இயற்கைக்கும் பேதமென்னை அன்றோ. மனிதர்கள் எவ்வளவோ வல்லமை சாலிகளாக இருக்கிறார்கள் புகைவண்டியால் நெடுந்தூரத்தை வெகுசீக்கிரத்தில் கடந்துசெல்லும்படிக்கும், தந்திக்கம்பியால் பல்லாயிரக்கணக்கான தூரத்திற்கப்பாலுள்ளவர்களிடம் பேசவும், மனதிற்குவேண்டும் உட்டாணத்தைக் கெடிகாரமென்ற கருவியால் நிலையிட்டுத்தெரிந்துகொள்ளும்படிசெய்திருக்கும் விசித்திரமும் பின்னும்பற்பல அற்புதங்களும் செய்யும் வல்லமை இருந்தும் எவராலும் எக்காலத்திலும் தடுத்து நிறுத்தப்படக்கூடாத மரணத்தை, மாற்



றும் வல்லவருலகிலுண்டோ, இதனால் இவ்வுலக அமைப்பை பிரபஞ்ச நாடகமென்று பெயரிட்டு வருணிப்பதற்கு ஏதேனும் தடையுண்டோ, ஆகலால் மனிதர்கள் தங்கள் செல்வமும், கவுரவமும் பால்யப்பருவமும், நிலையற்றதெனவுணர்ந்து தாங்கள்பிறந்த தேசத்திற்கும், தங்களுடன் சகோதரர்களான தேசவாசிகளுக்கும் தங்கள் தங்கள் சக்திக்கியன்றமட்டிலுதவிசெய்து, இன்பதுன்பமிரண்டும் ஒன்றெனக்கருதி, ஒரே தன்மையுடனிருந்து உலகமென்ற நாடகசாலையிலுநாம் ஓர் மூலையிலிருப்பவரென்றும் இந்நாடகத்திற்குத் தலைவரான பரம்பொருளின் கருத்தறிந்து அவரைவணங்கித் துதித்துசமயோசிதமாக தங்களுக்கு போடப்பட்ட நற்பருவேஷத்திற்கேற்க வண்ணம் நடித்துவரக்கடமைப்பட்டிருக்கிறோமென்பதை ஒருவாறு ஞாபகப்படுத்தலானோம்.

## நமது பத்திரிகை.

" நித்தனரியலனிறைந்த சுத்தன்,
நத்தன பரமன்நமக்கென் றுத்துணை "

அநாதி முத்தசச்சிதானந்தப்பிழம்பாகிய பரம்பொருளையுணர்த்தும் ஆரணங்கட்கு ஆதியும் அந்தமும் கூறுவதும், மற்றெல்லாமந்திரங்கட்கும் பிறப்பிடமாயமிருக்கும், சிவஸ்வரூபமாகிய பிரணவத்திற்கும் முதலெழுத்தாயும், இதழ் நா, பல், அண்ணந்தொழிலால் சிதறுது நாதமாத்திரையாயும், ஸ்வரூபமாயுமுள்ள அகாரம், நீண்டு, சிவத்தோடு அக்கினியிற் சூடுபோல் அபின்னமாய் ஒளிரும் சக்திபீஜமாகிய ரிகாரமும், ஆன்மாவிற் சிறந்த ஆன்மக்களுக்கும் நால்வகைத்தோற்றம் எழுவகைப்பிறப்பு, எண்பத்துநான்கு நூறாயிரம் யோனிபேதங்களுள் சிறந்த மனிதப்பிறப்பின் முக்திபேற்றிற்குரிய ஆண்மையைப்புணர்த்தும் அன்விகுதியும் புணர, சிவபீஜம் சக்திபீஜம், ஆன்மபீஜம், கூடி ஆரியன் எனவாயிற்று ஆரியன் என்னும் பதத்திற்கு பூஜ்யன் என்பதுபொருள் இப்பெயர்வாய்ந்த அநேகம் பெயர்களுக்கும் இக்காரணமே பற்றியபெயராயிற்று.

இவ்வாரியனென்னும் பத்திரிகையில் பரம்பொருளைப் பற்றியும், ஆன்மாவைப்பற்றியும் மாயையைப்பற்றியும், கர்மத்தைப்பற்றியும், ஆணவத்தைப்பற்றியும், தர்மார்த்த காமமோக்ஷ சதுர்வித பலன்களைப்பற்றியும், ஆணவம், காமம், வெகுளி, மயக்கம், என்ற மூன்றையும் நீக்கிப்பரம்பொருளையடைவதற்கு ஹேதுவாகிய வேதாகமங்களைப்பற்றியும், ஆதியில் நான்கு வேதத்தையும் சரியை, கிரியை, யோகாதி ஞானபாதங்களையும். பிரம்மசரியம் வானப்பிரஸ்தம், காருஹஸ்த்தியம், ஸன்னியாஸம் முதலாகிய நான்கு ஆச்ரமங்களையும் சிக்கறுத்துவைத்தும்மற்படித்தய வியாஸமுனிவரால் செய்த வியாஸ சூத்திரத்திற்கு; லோகவிட பாஷ்யம் ஸ்ரீ சங்கராசாரியர். இராமானுஜாசாரியார், மத்

ஆசாரியார் முதலிய பாஷ்யாசாரியர்களினலே பேற்படுத்திய பாஷ்யங்களையும் அகங்கை ஆமலகம்போல சந்தேக விபரீதமறவெழுதியும் இவைகளோடு இயைபுடைத்தென்று சான்வதி அவதாரியையும் திருமேனியோடு திருக்கைலாயத்திற்கு "சிதக்களப" வென்னும் அகவலைப்பாடி சிவபெருமான் திருவருளால் அடைந்தவருமாகிய ஒளவைபிராட்டியாரின், அருமைத்திருவாக்கினல் பின்வருமாறு சொல்லியபடி "தேவர்குறளும் திருநான்மறைமுடிவும், மூவர்தமிழும் முனிமொழியும் கோவைத்திருவாசகமும் திருமூலர் சொல்லும், ஒரு வாசகமென்றுணர்" என்றபடி மேற்கண்ட நூல்களில் சாரங்களையும் இன்னுமனேக விஷயங்களையும்பற்றி இப்பத்திரிகையில் வெளிப்படுத்துவதினால் அவ்வபிதேயம் இதற்கேயுரியது.

ஆகையால் அறிவிற்சிறந்த கனவான்களும், கற்பிற்சிறந்த காரிகையர்களும், அழகிற்சிறந்த அறிவையர்களும், பொருளுதவி செய்து மேற்சொல்லிய ஆரியன் என்னும் பத்திரிகையை வாங்கிப்படித்து அதனால் அறம்பொருளின்பம் வீட்டையும் இல்லறம், துறவறங்களையும், பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரரென்ற நான்கு வர்ணாச்சிரமதர்மங்களையும் அறிந்து அநுபவித்து தர்மார்த்தகாமமோக்ஷங்களையடையும்படி பெருங்கருணைக் கடலாகிய சிவபெருமானை அநுதினமும் பிரார்த்திப்போமாக.

ஸகளர், விஞ்ஞானகலர், பிரளயாகலர், என்று முறையே ஸர்வக்ஞத்துவமுடையவராயும், ஞானஸ்வரூபியாயும், வியாபகமுடையவராயும், பொருளமையப்பெற்றதும் ஆயிரநாவுடைய ஆதிசேஷனும் பூர்த்தியாய் பொருளறிந்து சொல்லமுடியாத இந்த ஆரியனென்ற செல்விற்கு அறிவிலாதவனுகிய யான் எழுதப்புகுந்தது பெரியபாற்கடலை ஓரே மூச்சாய் உண்டு விடுகின்றேன் என்று எழுந்த ஓர் சிற்றெறும்பை ஒக்குமெனினும் நானும் ஒருவாறு எழுதலாயினன்.

S. பஞ்சநதய்யர்
எஸ் ஆர் ஸ்கூல் மாஸ்டர் கும்பகோணம்.



## பக்தி ஸங்கிரகக் குறிப்புகள்.

"கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்றபடி. இவ்வுலகனைத்தும் வியாபித்த ஓரே பொருளான பெருந்தகைக்குயாது குறையுளது, அவர் ஆகாசம்போல் வியாபித்து, அணோரணியான் மஹதோமஹீயான்" என்ற அணுவுக்கும் அணுவாய் மஹத்துக்கும் மஹத்தாய்



விரிந்து ஒவ்வொருசரீரத்தினுடைய ஹிருதயத்திலும் அஸங்கனாய் இருந்து ஜீவர்களைப் பிரேரணைசெய்து நடத்துகிறார் ஜீவர்களது கருமபரிபாகப்படிபோது சிருஷ்டிக்கிறார், வளர்க்கிறார், அழிக்கிறார் இரக்ஷிக்கிறார் ஆகையால் ஜீவராசிகளாகிய நாம் அவரால் நடத்தப்படுகிறோம். அதுபற்றி அவரிடத்தில் அன்பு இருத்தல் வேண்டும்.

"பக்தி வலைபிறகப்படுவோன்காண்க" என்றபடி அவரிடத்தில் பக்திசெய்யவேண்டும் பக்தியென்பதுயாதெனின்" தஸ்மின்பரம பிரேமரூபா பரமேஸ்வரனிடத்தில் இடைவிடாத பிரமைக்கு (பிரயம்) பக்தியென்றுபெயர் அது ஒன்பதுவிதமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது சிரவணம், கீர்த்தனம், ஸ்மரணம், பாதஸேவனம், அர்ச்சனம், வந்தனம், தாஸ்யம், ஸக்கியம், ஆத்மநிவேதனம், அதில்சிரவணம் ஈசுவரனது சரித்திரத்தைக்கேட்டல், கீர்த்தனம் அவர்நாமங்களை வாயாரச்சொல்லிப்பாடுவது ஸ்மரணம் எப்பொழுதும் நினைப்பது பாதஸேவனம் பாதத்திற்கு பரிசாரகம் பண்ணுதல் அர்ச்சனம் பத்தர புஷ்பங்களை ஈசுவரனது சிரசில்வைப்பது வந்தனம், நமஸ்கரித்தல் தாஸ்யம் அவருக்கு அடிமையாவது, ஸக்கியம் சிநேகபாவத்தோடிருத்தல் ஆத்மநிவேதனம் ஈசுவரனிடத்தில் பேதமின்றி மனதை ஐக்கியப்படுத்தல் சரீரத்தைமறந்து சரீரத்தை ஈசுவரனுக்கு அர்ப்பணம்பண்ணுதல், இத்தகைய ஒன்பதுவித பக்தியைச் செய்தால் என்ன கிடைக்கும்.

"பக்தியின் கனைமுக்தியன்றோ"

என்றபடி நவவிதமான பக்தியில் ஒன்றையாவது கைக்கொண்டால் முக்திபெறலாம். அங்ஙனம் எவர் கனமடைந்தார்களென்றால், சிரவணத்தால் பரீக்ஷித்து முக்தியடைந்தார், எங்ஙனமெனில் தனது ரிஷியின்சாபத்தால் பிராணன் ஏழுநாளில் போய்விடுமென்று கண்டு அவ்வேழுநாளைக்குள் முக்திக்குரிய வழியாது செய்யக்கூடுமென ஆராய்ந்து சுகப்பிரம்மரிஷியால், பாகவதம் பன்னிரண்டு ஸ்கந்தத்தையும் கேட்டு முக்தியடைந்தனர், அங்ஙனமே ஒவ்வொரு பக்தியையும் தெரிந்து பரமேசுவரனது பக்தியைச்செய்வோமாக,

"நானெனுமகந்தை நன்மையைக்கெடுக்கும்"

என்றபடி அகம்பாவத்தோடு பக்தி செய்யக்கூடாது. அங்ஙனம் செய்தால் நற்கதிகிடைக்காது. ஏனெனில், நாரதர் ஒருகாலத்தில் ஒரு ஆரண்ணியத்தில் சஞ்சரிக்கும் காலத்தில், அங்கு ஒரு மரத்தடியில் ஒரு தபோநிஷ்டர் இருந்தார். அவரைக்கண்டு நாரதர் நமஸ்கரித்தார், அவரும் நமஸ்கரித்தார். இருவரும் அன்புடன் பேசிக்கொண்டிருந்தார்கள் அக்காலத்தில், நாரதரைப்பார்த்து அம்மரத்தடியிலிருந்த ரிஷி தாங்கள் எங்கு போகிறீர்கள் என்றார் நான் கைலாசயாத்திரைக்குப்போகிறேன என்றார். அதைக்கேட்டு அம்மஹரிஷியானவர் "நான் முக்தி

யடைவதெப்பொழுது என்று கேட்டு" வரும்போது என்னிடத்தில் உத்திரம்சொல்லிப்போகவேண்டுமெனவே, உடனே நாரதர்!

ஓம் என்றுஉத்தாரங்கூறி இன்னும் கொஞ்சதூரம் சென்றார். அங்கு ஒரு புளியமரத்தடியில் உட்கார்ந்திருந்தவரண்டைப் போனார் அவர் நாரதரை எங்கு போகிறீர் என்று அவரைப்போலவே கேட்டனர் கைலாசயாத்திரைக்குப் போகிறேன் என்றார். ஆயின் எனக்கு எவ்வளவு ஜன்மம் உண்டு என்றும் நான் எப்பொழுது முக்தியடைவேன் என்பதையும் கேட்டுச்சொல்லவேண்டுமென்றார். சிலநாட்கழித்துஇவர்களது, அகங்காரத்தைப் பரீக்ஷிக்கும்பொருட்டு முதல்வரண்டையிற்போயினார், அவர் வந்தவுடன் கேட்பீர்களா என்றார்? ஆம் கேட்போம்.

ரிஷி:— நான் முக்தியடைவதற்கு எவ்வளவு ஜன்மம் எடுத்தல் வேண்டும்?

நாரதர்:— இன்னும் ஆறு ஜன்மம் என்றார்.

ரிஷி:— இன்னும அவ்வளவு ஜன்மம் எடுக்கவேண்டுமா? நான் எவ்வளவு தபசுபண்ணியும் இன்னும் ஜன்மமும எடுக்கவேண்டுமா? என்று அகங்காரத்துடன் தற்பெருமையைக்காட்டினார்

நாரதர்.— கீர்கோடி ஜன்மமெடுத்தாலும் உமக்கு முக்திவராது என்று கூறி மற்றொருவரிடத்துப் போயினார் அவரும் அங்ஙனமே கேட்டனர் நாரதர் இந்தப்புளியமரத்தில் எவ்வளவு இலைகளிருக்கின்றனவோ அவ்வளவு ஜன்மமெடுத்தல் வேண்டும் என்றார்.

ரிஷி:— என் ஜன்மத்திற்கு ஓர் எல்லையாவது உண்டாயிற்றே கருணை தன்னியனுனேன் பரமேஸ்வரனுக்கு என்னிடத்தில் அவ்வளவு கிருபையுண்டானதைப்பற்றி நான் மிகவும் ஆனந்திக்கிறேன். என்று அகங்காரமின்றி பக்தி வினயத்துடன் கூறினார். உடனே நாரதர், உமக்கு இப்பொழுது முக்தியென்றார், ஆனதால் நாம்அறிந்துகொள்வது யாதெனில்:—

"மமேதிபத்யதேஜந்து நிர்மமேதிவிமுச்யதே"

என்று புத்திரமித்திரகளத்திர தனதானியாதிகளை எனது எனச்சொல்வதே பந்தம். நான் சரீரமல்ல, புத்திரமித்திராதிகள் எனதல்லவென்பதே மோக்ஷம். என்றபடி அகமபாவமே பந்தத்திற்கு ஹேதுவாக இருக்கிறது. எப்படியெனில், ரத்த மாம்ஸமயமாய் இருக்கிற சரீரமானது ஜடமாய் இருத்தலால் அது நானல்ல. பின எதுநானென்னில், சரீராதிகட்கு விலக்ஷணமாக எப்பொழுதும் நித்தியமாய் இருக்கப்பட்ட ஜீவனாயிருக்கிறேன். அச்சிவனிடத்தில் அஞ்ஞானத்தால் நான் எனது என அகங்காரம் உண்டாகின்றன. அவ்வகங்காரம் எதுபரியந்தம் இருக்கிறதோ, அதுபரியந்தம் அவனை ஜீவன் என்பர். அது ஒழிந்தால பரமாத்ம பாவமடைவானாகலாம்.



## திருவருள் வேண்டும்.

சிவாயநமவென் றுசிந்தித்திருப்போர்க்
கபாயமொருநாளுமில்லை—உபாய
மிதுவேமதியாகு மல்லாத வெல்லாம்
என்றுவிதியேமதியாய் விடும்.

தெய்வத் தன்மைபொருந்திய நமது அன்னையாகிய ஒளவையாரும் கூறியிருக்கிறார்கள் ஆனதுபற்றியே பூர்வம் இம்மாநிலத்தில் மானிடராய்ப்பிறந்த நம் ஆன்றோர்கள் தம்மதக்கொள்கைக்கேற்ப சைவசமயத்தார், வைஷ்ணவ சமயத்தார்முதலிய அறுவகைசமயத்தார்களும், சிவபிரான், திருமால் முதலியவர்களெழுந்தருளியிருக்கின்ற ஆலயங்களின் தெரிசனம் விதிப்படிசெய்து உற்சவ முதலியவைபவங்கள் பிரக்யாதியாய் நடத்தி நேத்திரானந்தமாய்க்காண்பதும், சிவன் மால், திருத்தொண்டர்கள் ஆழ்வாராதிகள், ஆழ்வாராதியர்கட்கன்பர்கள் முதலியவர்களின் திருவடிகளர்ச்சித்துமுறைமைய அவரவர்கட்குரிய ஆசாரங்களோடு அறுசுவையுடன் அன்னமளித்து ஆனந்தபரவசத்திலாழ்ந்து அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி பிரபந்தம் முதலிய அருமைநூல்களை அன்புடன் சித்தசுத்தமாய் தியானித்து கரகோஷமிட்டோ? ஜீவிதான முதலிய கோஷத்தோடோ பாடியும் பக்திசெய்தும் மோக்ஷவீடடையப்பெற்ற அனேக மகான்களின் புண்ணிய சரித்திரங்கள் அபரிமிதமாகத் தற்போதும் காணுவதிருக்க, இன்னும்,

நீரில்லா நெற்றிபாழ் நெய்யில்லாவுண்டிபாழ்
ஆறில்லாவூருக்கழகுபாழ்—மாறில்
உடன்பிறப்பில்லாவுடம்பு பாழ்பாழே
மடக்கொடியில்லாமனை.

(என்பது) திருநீரணியாத நெற்றி நெய்யில்லாத உண்டி, நதியில்லாத நகர் சுற்றசகோதரரில்லாதவுடம்பு, இல்லறத்துக்குரிய பெண்சாதியில்லாத வீடு, இவையாவும் பாழென ஒளவையாரே கூறியுளார் ஆகவே எச்சமயத்தோரும் அவ்வச்சமயத்துக்குரிய சின்னங்களை நெற்றில் தரிக்கவேண்டு அத்தியாவசியகம் என்பதை விளக்கும்பொருட்டு இச்செய்யுளை இம்முறை எடுத்துக்கூறினோம். மேல்கூறிய நல்லியற்கையமைப்புசோர்க்கத்தாகு "கடலுலகில் வாழுமுயிரெழு பிறப்பினுண்மிக்கவசுபெருமைத்தாமாய், கருதப்பிறத்தலரிதினுமுயர் சாதியிற் கற்புவழிவருதலரிது, வடிவுமுடனவயவங்குறையாது பிழையாது வருதலதுதனினுமரிது, வந்தாலும் புண்ய மிதுபாவமெனவெண்ணியாசில்வழி நிற்றலரிது, கெடுபதனவாறு தவிர்த தனிரக்கமுளநெஞ்சினோடிருத்தலரிது, நேசமுடனுன் பதத்தன்பனாய் வருதலின் நிலத்ததினுமரிதாம, அடியவர்க்குசம்மொழி பூபதிபெற்ற கதிபெருமை மதவேளுறுதினமுமனைதினிலை தருசதுரகிரிவளரப்பதி சுரகேவனை எனையபல வாவைக்கவிராயருந் தயதருமை வாக்காலறைந்திருக்கிறார்கள் ஆகையால் நாம் பூர்வம் செய்த புண்ணியவசத்தால் இச்சிறந்தமானிடப்பிறவிகிடைத்தும், "நன்மைகடைப்பிடி" என்றஒளவையார் அருமை மொழியைக் கடைப்பிடித்து இருக்கிறதுதன்றன்று ஆகவே எச்சமயத்தினும் அச்சமயத்துக்குரிய வழிபடுகடவுளை ஆலயங்களில் சென்றுவணங்குதல் முதலிய பக்திசெலுத்தி சமயநூல் ஆராய்ச்சி செய்ததன்படி நடந்துநன்மையை உலகோர்க்கருளி உத்தமராகக் குலமும் புகழும்வேண்டும்

அஃதெவ்வாறெனிலோ? மேல்கூறியவெல்லா இலக்ஷணங்களுமமைந்தோடு பின்வருமாறுமுள்ளோரேயாவர். செய்ந்நன்றிமறவாதபேர்களும் ஒருவர் செய்நன்றியை மறந்தபேரும், இரவியர்க்கரவாது மொருவர் மனையாட்டிமேற்சித்தம்வையாதபேரும் கைகண்டெடுத்தபொருள் கொண்டுபோய்ப் பொருளாளர் கையிற்கொடுத்தபேரும், காசினியிலொருவர்செய்தருமங்கெடாதபடிகாத்தருள்செய்கின்றபேரும், பொய்யென்றுசிறிதுகோடிவரினும் வழக்கழிவுபகலாதநிலைகொள்பேரும், புவிமீதுதலைபோகுமென்னினுமசனவிலும் பொய்மையுரையாதபேரும் ஐயவிக்கிவரெலாஞ்சற் புருடரென்றுலகிலமகிழ்வதருமைமதவே ளனுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே.

அடைக்கலமெனத்தேடி வருவோர்தமைக்காக்குமவனேமகாபுருடனும், மந்திரம்... சாமலொருவரினுமெதுபோகினுஞ்சித்த மசைவிலானேமகாதீரனும், கதொடுத்தொன்று சொன்னசொற் றப்பாது செய்கின்றதோன்றலே மகாராசனுந்தாறிக்கலக்கின்றபேர்வார்த்தை சேனாத்துளையே மகத்மேருவாம் அடுக்கின்றபேர்க்குவரு மிடாதீர்திரட்சிக்குமவானமகாதியாகியா, மவரவர்தரஞ்சுப்பிரிந்துமறியாதைசெய்குமவனேமகாதியாகியா, மவரவர்மவரவர்தராதர மறிந்துமறியாதைசெய்யு மவனேமகாவுசிதனும், அடர்கின்ற முத்தலைச் சூலமனவேலலேயமலனேயருமைமதவே, ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. என்றார் அக்கவிச்சிகாமணியாரும். ஆதலின் ஆரியர்களாகிய நாம்கடவுளின் திருவருளைப் பெறுதற்கு அவ்வாறு நடந்துகொள்வதுடன்,

உலகெலாமுணர்ந்தோதற்கரியவர்
நிலவுலாவியநீர்மலிவேணியர்
அலகில்சோதியனம்பலத்தாடுவார்
மலர்சிலம்படிவாழ்த்திவணங்குவாம்

சித. நா. சிதம்பரம்பிள்ளை

---

## ஸ்ரீசப்தமும் ஸ்ரீவித்யையுமா விளங்கும் உண்மைத்தாய்.

விவேக சித்ரமணி.

“ஸ்ரீகுரு ஸர்வகாரணபூதசக்தி” என்பது சுருதி வாக்கியம். (பாவனோபநிஷத் முதல் மந்திரம்.) எல்லாவற்றிற்கும் காரணபூதமாயிருக்கிற சக்தியே, மேலான ஸ்ரீகுரு. அந்தப்பராசக்தியை ‘ஸ்ரீமாதா’—தாய் என்கிற சப்தத்தால் தேவர்களும் ரிஷிகளுமதொழுது வணங்கியிருக்கிறார்கள். இந்த தேகத்தையீன்ற தாயார்கள் ஜீவனுக்குரியதான தாபத்திரியங்களையும் போக்க அசக்தர்களாயிருக்கிறார்கள். தாய்கள் எத்தனை! தந்தைகள் எத்தனை! நான் பெற்ற பிறவிகள் எத்தனை! பெற்றுப் பெற்றலுத்தாள் என் தாயும், பிறந்து பிறந்திளைத்தேன் நானும், இனிப்பிறந்திறவாப் பேரின்ப சுகம் பெறுவதென்றோ! என்று மஹான்களெல்லாம் தாபத்திரியங்களின் துன்பம் பொறுக்காமல் கசிந்துருகி வருந்தியிருக்கிறார்கள்.

“நன்றறியேன் தீதறியேன் நானென்று நின்றவனை
என்றறியேன் நானேழை யென்னே பராபரமே.”
“இன்றுபுதிதன்றே யெளியேன் படுந்துயரம்
ஒன்றுமறியாயோ வுரையாய் பராபரமே”



“எத்தனைதான் ஜன்மமெடுத்தெத்தனைதான் பட்டதுயர்
அத்தனையு நீயறிந்ததன்றோ பராபரமே.”
“அன்னையிலாச் சேய்போல அலக்கணுற்றேன் கண்ணூர
வென்னகத்திற் றாய்போலிருக்கும் பராபரமே.”

என்று பெரியோர் இன்னுமெவ்வளவோ கசிந்துருகிப் பாடியிருக்கிறார்கள். பின்னும்:—

“அஞ்சலஞ்ச லென்றடியைக் கப்போதைக் கப்போதே
நெஞ்சிலுணர்த்து நிறைவே பராபரமே.”
“என்னையுன்றன் கைக்க[illegible]றென்னையான்கொடுத்து
பின்னையுன்றற் பெற்றநலம் பேசேன் பராபரமே.”
“வாய்பேசா வூமையெனை வைக்கவென்றோ நீ மௌனத்
தாயாக வந்தருளைத் தந்தாய் பராபரமே.”

என்றும், இவ்வாறாக ஸ்வானுபவத்திலிருந்து மேலோர் செப்பியிருக்கிறார்கள். இதனால் தாபத்திரயங்களாலடிபட்டுத் தவிக்கும் ஜீவனை ஆதிபராசக்தி அன்னையாய் வந்துகாத்து, “தன்னைத் [illegible]னைத் தந்தாண்ட” கருணையங்கடலாம் தாயாக இருக்கிறாள். ஆகையால் அவளை “ஸ்ரீமாதா” வென்றுகொண்டு தொழுது வணங்குவதே எல்லாவற்றிலும் மேலான பூஜையும், யோகமும், ஞானமுமாம்.

“ஆடுவதும் பாடுவது மானந்தமாக வுன்னைத்
தேடுவது நின்னன்பர் செய்கை பராபரமே.”
“தானாகவந்து தடுத்தாட்கொண்டென்னையின்ப
வானாகச் செய்த[illegible] வானேபராபரமே”

என்று இப்படிப் பாடியிருப்பதால், ஸ்வானுபவச் செல்வர்கள் கொண்டாடும் பரமகுருஸர்வகாரண பூதமான ஆதிபராசக்தியோடு அபேதமாகப் பாவிக்கப்படும் பாவனையையுணர்ந்தோரே “ஸ்ரீமாதா” வென்னும் நாமத்தின் அருமை பெருமையை யுள்ளபடி யுணர்வார்கள். ஜகன்மாதாவாகிய பராசக்தியொன்றே நம்மைக் காத்து ரக்ஷிக்கத்தக்க சக்தியுடையதென்றறிந்தவர்கள் அழுகிறபிள்ளை பால்குடிக்கு,,மென்பதாக அந்த ஆதிபராசக்தியை ”அம்மா,, என்று வாய்விட்டலறியும், மனதில் நினைத்தும், இரதயத்துள்வைத்தும் ஸதாகாலம் பூஜைசெய்து வருவார்கள். ஸ்ரீசப்தத்துக்கு அநேக அர்த்தங்களிருந்தாலும் அவை எல்லாமவல்லை அப்பிசையை யொட்டிவந்தனவேயன்றி வேறல்ல. சக்தி இரண்டுவிதம். பின்னசக்தியென்றும் அபின்னசக்தியென்றும் சொல்வார்கள். பின்ன சக்தியென்பது சிருஷ்டித்திதி ஸம்ஹாரார்த்தம் ஆதியில் ஒன்றாகவுள்ள சக்தியினின்றும் வேறுபட்டுப்பிரிந்து அவ்வத்தொழிலையியற்றியபின் அதன் காரணத்தில் லயிக்கும் பேதசக்திகளாம். அபின்ன சக்தியென்பது திரோபவானுக்ரகார்த்தம் அந்தர்த்தம் ஏகமாயிருந்து பரிபக்குவமிருந்த ஆத்மாவுக்கு “தாயுமகளு நற்றாரமுமா” யிருந்து காப்பாற்றும் “ஸர்வகாரணபூதசக்தி” யாம். ஸ்ரீயென்ற சப்தத்துக்கு லக்ஷ்மியென்றும், ஸரஸ்வதியென்றும், தாதி (வளர்ப்பவள்)என்றும் தாத்ரி (பூமி)யென்றும், இன்னும் வளர்க்கும் ஐசுவரியம், ஜயம், அழகு, ஜீவனம் ஆபரணம், திரவ்யம், பிரதமை யென்கிற அநேக அர்த்தங்களுண்டு. இத்தனை அர்த்தங்களையும் உள்ளபடி ஆராய்ந்துபார்த்தால் எல்லாம் சக்திஸ்வரூபமாகவே விளங்கும். ஆகையால் சுருதியில் ஸ்ரீசப்தத்தால் “மஹாத்துக்களுக்கு அமிர்த வருஷம் பொழிவதாயிருப்பது எதுவோ அதுவே ஸ்ரீ,, என்று சொல்லப்பட்டிருக்கிறது. வேதங்களும் ஸ்ரீயென்றே பெயர் பிரம்மனை முதலில் சிருஷ்டித்து அவருக்கு வேதங்களை ஓதுகச் சிறக்கற்பித்த தேவிக்கும் ஸ்ரீயென்றே பேர் இப்படி எத்தனைவிதமாக அதை அர்த்தம்செய்து பார்த்தாலும் அது

சக்திரூபமாகவே விளங்குவதாம். அது சக்தியின் பீஜாக்ஷரமாக விருக்கிறது. இந்த ஸ்ரீசப்தத்தின் உண்மையை உள்ளபடியறிவதற்குக் காரணமாயிருக்கிறவித்தையெதுவோ அதுவே, ஸ்ரீவித்தையென்று சொல்லத்தகுந்தது. இந்த ஸ்ரீவித்தையை "இராஜவித்தையை" என்றும் கூறப்படுகிறது. ஏனென்றால் ஸ்ரீசப்தார்த்தத்தை முற்றுமுணர்ந்தவன் ஸ்ரீசப்தார்த்தங்களையுமுணரவல்லவனாகிறான் ஸ்ரீ என்கிறசப்தமே நாதப்பிரம்மத்தையுணர்த்துகிறது, இந்த நாதப்பிரம்மத்தோடு ஒன்றுபட்டவன் தானே இருந்திருந்தியங்குகிறான். இதைப்பற்றித் திருமூலர் இத்திருமந்திரோபதேசம் செய்திருக்கிறார்:—

"நாதமுடிவிலே நல்லாளிருப்பது | நாதமுடிவிலே நல்யோகமிருப்பது
நாதமுடிவிலே நாட்டமிருப்பது | நாதமுடிவிலே நஞ்சுண்டகண்டனே"

இதனால் நாதமுடிவெய்திய ஆத்மா சகலைஸ்வரியங்களையும் பெற்று மோக்ஷஸாம்ராஜ்யத்தையடைகிறானென்பது குறிப்பிக்கப்பட்டது. இந்த ஸ்ரீசப்தத்தின் உண்மையை உணர்வதற்கு ஆதாரபூதமாயுள்ள ஸ்ரீவித்தையானது உத்தம பாத்திரங்களான மஹாயோகிகளாலேயே அனுஷ்டிக்கப்படத்தக்க யோக்யதையைக் குறைவானவர்கள் இந்த வித்தையை அனுஷ்டிக்க அசக்தராகிறார்கள். வித்தையின் யோக்யதை குணவிருது. வித்தைகளிலெல்லாம் சிறந்த ராஜவித்தையாம் ஸ்ரீவித்தையை உபாஸிப்பவர்கள் சத்குண சம்பத்து முற்றுமமைந்தவர்களாகவிருக்கவேண்டும். அப்படிப்பட்டவர்கள் உபாஸிக்க அநுகூலமாகும் பொருட்டு "ஸர்வகாரணபூதாசக்தி" யாகிய "ஸ்ரீகுரு" வோடு "நவரந்த்ர" ரூபமான தேகத்தை அபின்னமாக பாவிக்கவேண்டுமென்று சொல்லக்கருதி சுருதியானது "தேக நவரந்த்ரரூபோதேவ:" என்று முழங்குகிறது. "நவசக்திரூபம் ஸ்ரீசக்கிரம்" என்ற சுருதிவாக்கியத்தால் ஸ்ரீசக்ரமானது நவசக்திரூபமானதேயென்று தெரியவருகிறது. இந்த நவசக்கிரங்கள் மூலாதார, முதலிய ஆறு ஆதாரங்களும் அவற்றின்மேல் ஊர்த்வஸஹஸ்ராரதளகமலம், "அத" — கீழ் ஸஹஸ்ரதளகமலம், "லம்பிகாக்ரம்" என ஒன்பதாம். இந்த ஒன்பது ஆதாரங்களும் பாவனாமாத்ரமானதாகவின்றி, "தேஹோ தேவாலய:ப்ரோக்த:" என்ற சுருதிப்படி தேவாலயரூபமான இந்த தேஹத்திற்கு உண்மையாகவுள்ளபடியுள்ள ஆதாரங்களாகவிருக்கின்றன, மேற்றிசை சாஸ்திராராய்ச்சி விற்பன்னர்களில் சிரேஷ்டர்களாயிருப்பவர்களும் நன்றாய் கண்டுணர்ந்து ஆராய்ந்துவருகிறார்கள். இந்த ஸ்ரீவித்தையின் சாதகத்தால் தேகத்தைப் பூரணமாயுணர்ந்துய்யவழி யேற்படுகிறது. இந்த வழியை எல்லாருக்கும் சொல்வதால் சத்குண சம்பத்தில்லாதவர்கள் கெட்டுப்போகுதற்கு வழியேற்படுமாதலால் அதை அதிரகஸியமாகக் குறிப்பித்து, "ரகஸ்ய நாமாவளி" யென்று ஆயிரம்நாமங்களாகச் செய்திருக்கிறார்கள். வாசினி முதலிய தேவதைகளானவர் லலிதாம்பாள் உத்திரவுப்படி செய்யப்பட்டதாகவும் ஹயக்ரீவர் அகஸ்தியருக்கு வெளியிட்டுச் சொன்னதாகவும் ப்ரம்மாண்ட புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த இரகஸிய ஸஹஸ்ர நாமமாகிய "லலிதாஸஹஸ்ரநாமம்" எல்லாரும் கேள்விப்பட்டதும் கோவில்களில் விசேஷமாய் அர்ச்சனைகள் செய்ய உபயோகிக்கப்படுவதாயுமிருந்தாலும் அதன் மர்மத்தையுணரத்தக்கவர் குருவழிபட்டுத் தேர்ந்தவரன்றி மற்றவர்கள் உணரார். இப்படிப்பட்ட அருமையான ஸஹஸ்ரநாமங்களின் இரகஸியத்தை உள்ளபடி யோதியுணர ஸ்ரீசக்ரம் இன்றியமையாத சாதனமாம். இதன் இரகஸிய மகிமையை ஒருவாறு சுட்டிக்காட்டினதன்றி மேல்விவரிப்பது அசாத்தியமாதலால் இதைப்பற்றி குஹ்யமாய்க் குறிப்பித்தே நிறுத்தலாயிற்று.

76992



## மனநிலை பிறழாமன்னன்

இப்பூலோகத்தில் புண்ணியபூமியென்று புலவர்களாற் கூறப்பட்டுள்ள இமயமலை முதல் கன்னியாகுமரி வரையிலுள்ள ஆரிய வர்த்தத்துச் சோணாட்டின்கண் நீர்வளம், நிலவளம், குடிவளம், மலைவளம், வனவளம் முதலான அறுவகைவளங்களால் ஒன்றோடொன்று குறைவின்றி விளங்குவதும், அறநெறி தவறாத அந்தணச்சேரிகள், பின் முதுகுகாட்டாத பாவலர் வீதிகள், அணுவளவேனும் பிசகாது வியாபாரத்துறையில் பெருஞ்செல்வம் படைத்த வைசியர் தெருக்கள், மேற்கூறிய மூவினத்தவர்க்கும் தக்க சமயங்களில் உதவியும் தொண்டுபுரிந்துவரும் சூத்திரர் வீதிகளும் சூழப்பெற்று சிவாலயம், விஷ்ணுவாலயம், சிவாலயம் முதலியவைகளால் சதாபிரகாசித்துக்கொண்டும், வேதாகம புராணாதிகளிலுள்ள விஷயவாராய்ச்சியிலுயர்ந்த முதலியவர்களால் கூறப்பட்டுள்ள நெறியினின்றும் பிறழாது நிருபாசிரமதர்மங்களின் பிரகாரம் நடந்தும் அரயனை கடவுளெனப்பாவித்து வணக்கத்துடனும் ஒழுக்கத்துடனும் குடித்தர்மமென்பதைக்கனவிலும் மறவாத குடிகளும் அமைச்சராதிகள் புகழ்ந்துகொண்டாடவும், அந்தணர் முனிவராதியர் ஆசிமொழிகூறவும், வித்துவான்கள் பாடகர், வந்தியர் முதலியோர் புகழும்படியாய் அரசுசெலுத்திவந்த மதிபூசி எனும் பெயர்கொண்ட காவலனிருந்தான். அக்காவலன் தனக்குப்பின் தந்நாட்டையாளப் புத்திரனில்லாதகுறையால் மனவருத்தமுற்று முப்பத்திரண்டறங்களையுமியற்றியும். பிராமணர் முதலியவர்களுக்கு சோடச மகாதானங்களுங்கொடுத்தும் குளங்களை வெட்டியும், கோவில் சாலை, சோலை, சத்திரம், சாவடிகள் கட்டுவித்தும்—இவ்விதமாக அளவிறந்த தர்மங்களைச்செய்து வந்தானெனினும், அவனது மனோபீஷ்டம் நிறைவேறுவதாகக்காணோம். அதுகண்டு இனி நமக்குப் புத்திரப்பேறு கிடைப்பதென்பது பிசகு, இல்லறம் விட்டுக்கானகமடைந்து பரம்பொருளை நினைத்துச்சிந்தையை அவரது பாதபத்மங்களில் நிலைக்கச்செய்து தவமியற்றிப்புனிதனாவதே சிறப்பாகுமன்றிப் பிறிதில்லை. யெனத்துணிந்து மணிமுடி நீத்துச் சடை முடிதரித்து, பீதாம்பரம் விடுத்து மரவுரி தரித்துத் தண்டுகமண்டலதாரியாய்க் காவி தன்னமைச்சர்பால் செங்கோலைக்கொடுத்து, வேண்டிய நீதிகளையும் போதித்து அரசு கெடாமல் நடத்தும்படி கட்டளையிட்டுத்தான் இமயமலைச்சாரலிலுள்ள பதரிகாசிரமம் என்னும் ரிஷிகள் நிறைந்து மலர்வாசம் வீசப்பெற்றுக் காணுறுகள், பல்விதபட்சிகள், மிருகங்கள் கந்த மூலாதிகள் நிறைந்து மனமொருமித்து நிற்கச்செய்யும் தவமியற்றுவோர்க்கனுகூலமான இடத்தை நோக்கிச் செல்லலுற்றான்.

இவ்வாறு மனம் வெறுத்துச்செல்லும் மன்னனை அந்நாட்டுப்பிரஜைகள் கண்டு மனம் பொறாதுப்பிரிவினையாற்றாது பலவாறு துக்கித்துப் பின்தொடர்ந்தார்கள்; திரும்பவும் நாட்டிற்கு வந்துசேரும்படி வேண்டினார்கள். அரசனின் பாதங்களைத் தொட்டுமன்றாடினார்கள். இவைகளுக்கெல்லாம் அரசன் இசையாமல் தன் குடிகளை நோக்கி "என்னருமைக் குடிகளே; உங்களுக்கு யான் யாதொரு குறைவும் நேரிடா வண்ணம் பாதுகாக்கும்படி நம் பிரதிநிதியாகிய மந்திரியை அரசுபுரியும்படி ஆக்கியாயிருக்கிறேன்' நீங்கள் நல்வாழ்வடைந்து சுகித்திருக்கலாம்; நானோ இந்த முந்த சுத்தனை அம்பலவாணனை அனுதினமும் தியானித்துத் தவம்புரிந்து வரம்பெற வெளியேச்செல்லுகின்றேன், நீவிர் இந்த சற்காரியத்தைத் தடை செய்யாமல் நல்லுரை கூறி அனுப்புவதுதான் நலம்" என்று குடிகளுக்குரைத்தனன். தமது அரசனது வெறும்பிய மனம் வெறுத்ததைக் கண்டவெய்வெடிப்புப்போல பறந்து அரசனுக்கு விடைகொடுக்க அவன் மனமவெறுத்து கொடுக்கப்பெற்றதம்பிரஜைகளின் ஆசீர்வாதத்தைப் பெற்று நினைத்தபடியே ஆசிரமம்போய்ச்சேர்ந்தான். ஜடாமுடி தரித்த தவசிகளும் காவிவஸ்திரமுடுத்த சந்நியாசிகளும் நிறைந்திருந்த ஆசிரமத்தின்கண் தவம்புரியுமாறு தானவை (ராஜ்ஜியத்தை) த்தவிர்த்துத்தவசி வேடம்பூண்டு தாநியன் சிலதினங்கள்வரை காய்கனிகளையும் பின்னும் சில தினங்களில் பச்சிலைகளையும், பின்பு உலர்ந்துவிழும் சருகுகளையும் புசித்து நீர் அருந்தாமல் பனி நீரையும், பின் அதனையும் விட்டு இந்திரியங்களின் சேஷ்டைகளை யடக்கிப்பஞ்சாக்கினியின் மத்தியில் நின்று பரமசிவனையே பற்றுக் கோடாகக்கொண்டு பனி, வெயில், காற்று, மழை முதலியவைகளுக்குப்பயப்படாமல் அநேககாலம் தவம்புரிந்து வரும் நாளில் அவ்விடமிருந்த தபோதிகள் இவரது தவவலிமையையும் மனவைராக்கியத்தையுங்கண்டு வியப்படைந்தவராய் இவர்பாலணுகி விருத்தாந்தங்களனைத்தையுங்கேட்டு உவகைபூர்த்தவராகித் தமக்குத்தலைவரான முனிவரிடஞ் சென்று இவ்விவரமனைத்தையும் புகல்வாராயினர். தபோதிகள் கூறியதைச் செவிசாய்த்துக்கேட்ட முனிபுங்கவர் மிகுந்த ஆச்சரியமுற்றவராய் இவரை யணுகிச்சில நாள் பரிசோதித்து தமக்குள்ளேயே சந்தோஷங்கொண்டு "ஓ ராஜனே. நீர் இப்படிக் கடுந்தவம்புரிந்து காலகண்டரின் அருள் பெற வெண்ணுவது மிகுந்த புண்ணிய வசமேயானாலும், அப்புத்திரப்பேறால் உமக்கும் உம் முன்னோர்க்கும் நற்கதி யுண்டாகும்படி அறிவறிந்த மகனைப்பெறுவது மாட்சிமையுடையதாகும். உமது தவச்சிந்தை நிறைவேறக்கடவது, ஈசன் அநுக்கிரகிக்கக் கடவன் என்றுகூறிப்போயினர் பிறகு வேந்தனாகிய தவசி "ஏதடா, நாம் பிறவாப்பேறனைய என்னுவதைவிட்டு, பிறப்பதும் இறப்பதுமாகி ஆசாபாசங்க



ளால் கட்டுண்டு அலைபிகைப்பட்ட துரும்புபோல் அலைச்சலையும் சதா துயரத்தையும் தரக்கூடிய புத்திரபேற்றைகொண்டு விட்டோம். இது தவிர்த்துப்பேரின்பநிலையடைய நாம் முயற்சிப்பதே பெரிதும் நலமாகும்" என்று தனக்குள்தானே சிந்தனைகொண்டு அருந்தவமியற்றிவந்தான். இப்படி அரசன் தவமியற்றி வரும் சமயத்தில் கலகப்பிரியரான நாரதர் முனிவர் கையில் வீணையுங் கழுத்தில் ருத்திராக்ஷ துளசி மாலைகளும் உடலில் திருநீறும் பிரகாசிக்க அவ்விடத்தில் தோன்றினர். இம்முனி சிரேஷ்டரைக்கண்ட அம்மன்னவன் அவரை எதிர்கொண்டழைத்து நமஸ்கரித்துத் தர்ப்பாசனமிட்டு அதனில் அவரை வீற்றிருக்கச்செய்து வார்த்தையாடிக்கொண்டிருக்கும் சமயத்தில் முனிவரானவர் அரசனை நோக்கி "தவமியற்றும் தன்னியரே. நாம் கைலயங்கிரிக்குச் சென்றிருந்தபோது அப்பர்வதாதிபர் உமக்குச் சேவை சாதிக்கும் விஷயத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்ததைச்செவியுற்றோம். உம்மனோபீஷ்டம் கூடிய சீக்கிரத்தில் நிறைவேறும் ஐயமுறாதீர்" என்று சொல்லி மறைந்தார். மறைந்த மாமுனி வெள்ளிமலையடைந்து உமாமகேசவரரைப்பணிந்து வீற்றிருக்கும்போது பார்வதி சந்திரலோக சஞ்சாரியான நாரதரைப் பார்த்து எங்கேனும் ஏதேனும் விசேஷமுண்டோவென்று ஈசுவரனுந் திருவாய்மலர்ந்தருள நாரதர் தமக்கு எப்போதுமே தலைகத்தின்மீது பிரியமுண்டாதலால் சிவபெருமானை நோக்கி; "என்னுக்குள் என்னைப்போல் எங்கும் நிறைந்திலங்கும் பரமேட்டி அடியேனையும் சோதிக்க மனம்வைத்திருப்பதுபோலக் காணுகிறது. ஆயினும் பூவுலகத்தில் சிறப்பு வாய்ந்த தவசிகட்கிருக்கையாயிருக்கும் பதரிகாசிரமத்தில் மகத தேசத்த மனுநெறி தவறாது அரசாண்டுவந்த மதிபூஷி என்னும் அரசன் மகப்பேறு வேண்டி மஹாதேவராகிய தம்மை நோக்கிக் கடுந்தவம்புரிகின்றான். அவன் தவவலிமையானது தமக்கே தெரிந்திருக்கும்போது ஏழையாகிய அடியேனைச் சோதிக்கத் திருவளங்கொண்டது யாதோ," என்றுரைக்கவும், உமாதேவியார் புன்சிரிப்புடன் கறைமிடற்றண்ணலை நோக்கி அருந்தவம் புரியும் அவ்வரசனுக்குக்காட்சி தரவொண்ணாதிருப்பது கர்த்தராகிய தமக்கு அழகாமோ; ஆகவே போய்வருவோம் சுவாமி எனவே, கங்காதரன் புன்முறுவல் பூத்து "அன்பிற்கினிய அரிவையே, அவ்வரசன் இருமனப்படாமல் ஒரே மனத்தனாய் என்னையே கதியென்று துதித்துத்தியானிக்கும்போது அவனையாட்கொள்ளாமலிருப்பேனோ இனி சீக்கிரத்திலே அவனுக்குக் காட்சியளிப்போம், பெண்ணே", என்று அபயச்சம்மானிந்தனர். இவைகளெல்லாம் கேட்டிருந்த யாழ்வல்ல முனிவன் அம்மைகளையும் அப்பனையும் வணங்கித் தன்னிருப்பிடஞ்சேர்ந்தனன்.

சில நாட்களாயின சிவபெருமான் பார்வதிதேவியார், வி

நாயகர், சுப்ரமணியர், வீரபத்திரர், நந்தி முதலிய தேவர்களோடு சண்டாளரைப்போல் வேடந்தரித்துக் கள் குடந்தாங்கி நாயை யுரித்து மேற் போட்டுக்கொண்டு அவ்வாசர் தவமியற்றும் ஆசிரமத்தின் வழியே வந்து அங்குத் தவசி தயார் செய்துவைத்திருந்த பூஜா திரவியங்களை அசுத்தனப்படுத்தியதுபோல் செய்து மதுக்குடித்துக் கோலாகலம் நிறைந்திருக்க அத்தருணம் ஸந்ராஜபதயம் முதலியவற்றை முடித்துக்கொண்டுவந்த ரிஷியானவர் கண்டு ஆச்சரியமுற்று கேவலம் சண்டாளனாயிருப்பினும் இவ்வாசிரம மகிமையால் தன் சுபாவம் மாறிவிட்டதை அறியாமலிருப்பனோ. இது கடவுளின் திருக்கூத்தே யென்று தெளிந்து அச்சண்டாளனைப் பலவிதமாய்ப் போற்றித் துதித்து நிற்க, ஈசன் அவ்விடம் விட்டுப்பயத்தினால் வெருண்டு ஓட்டம் பிடிப்பவன் போல் ரூசனைகாட்ட உண்மையான தவசி பின்தொடர்ந்து பலவாறு வேண்டவும் மகேசுவரன் தம் மெய்யுருவங்காட்டி வேண்டிய வரம் கேள் என்றார். அதன்மேல் காவலன் பலபலவிதமாய்த் துதித்துப்பணிந்து "ஆண்டவனே, அடியேனுக்குத்தமது சிவசாயுஜ்ஜிய பதவி கொடுக்கச் சித்தம் பூத்தருளல்வேண்டுமென்று நமஸ்கரித்து நிற்றலும் அம்பலவாணர் புன்சிரிப்பு மிக்க உமக்குப்புத்திரப் பேறளித்தோம்; புத்திரப்பேட்டையினாலிருந்த போரவலைத்தணிக்குமாறு இன்னும் சிவகாலங் கழித்துப்பின்னர் நம்பதால் வந்து சேரக்கடவாய்" எனவும் மன்னன் "அவ்வாசை அடியேனைப் பீடியா வண்ணம் அருள் தரவேண்டும்" என்று வேண்ட மகாதேவன் "அங்ஙனமே யாகுக" வென்று சொல்லி அந்தர்த்தியானமானார்.

இங்கு இவ்வாறு நிகழ்ந்து வருமளவில் மகத தேசத்தின்கண் மன்னவன மனைவி தம் புருஷன் தவம் புரியச்சென்ற தினமுதற்கொண்டு ஊணுறக்க மற்றுத் தம்பதியையே நினைந்து சதா தியானித்துக்கொண்டிருந்தனள். இப்படி தியானத்திலிருந்து தன் நினைவு மறந்திருக்கும்போது பரமனருள் பூத்த பலனால் ராஜன் மனைவிக்குத் திடீரென்று ஆண்மகவொன்று பிறக்கவும் இது கண்ட புரத்தவர் ஆச்சரியமும் ஐயமும் உற்றவராய் பலவிதத்திலும் சிந்திப்பாராயினர், எவ்வாறெனில் காவலன் நாட்டை விட்டேகிப்பலவாண்டுகளாயின; இப்போது ராணி புத்திரனைப்பெற்றெடுத்திருக்கின்றனள்; இதென்ன அற்புதம் என்பர் சிலர்: கடவுளைக் கோரித்தவமியற்றும் வேந்தனுக்கிரங்கி கடவுளே மாய புத்திரனையளிக்கலாகாதோ என்பர் பலர். இப்படிப்பலவிதமாக வார்த்தைகள் பிறவாநிற்கும் சமயத்தில் கானகம் புகுந்து கடுந்த வம்புரிந்த கருணாநிதிக்காவலனும் கடவுளின் வரம் பெற்று தன் நகரடைந்தான், அடைந்தும் தன் மனையாள் தன் குழந்தையுடன் எதிர்ப்பட அப்போது அரசன் தன் மனத்திற் சந்தேகங் கொண்டவன் போல் நடித்து ஏ பேதாய் புருஷனி



ல்லாமற் பிள்ளையேது என்று சாவ அரசி திடுக்கிட்டு மூர்ச்சித்தனள். அது கண்ட குழவி அலறவும் அப்போது அங்குள்ளவர்கள் பிரமித்து நின்றனர், அத்தருணம் திடீரென்று இடிபோன்ற ஓசையுடன் வானினின்று ஓர்ஒலி பிறந்தது, அரசே அரனளித்தவாக்குப்படி அரிவை வயிற்றினின்றும் பிள்ளை பிறக்க ஐயமுறலாமோ எனவே கேட்டகாத்தரா அனைவரும் சந்தோஷ சாகரத்திலாழ்ந்தவராய் அரசனையும் அரசியையும் போற்றிப் போற்றிப் பூசனைபுரியலாயினர் கடவுள் கிருபை பரிபூரணமாயிருந்ததை யறிந்த குடிகள் ராஜ தம்பதிகளை அனுதினமும் மறவாதிருக்குமாறு அன்று தினத்தை ஒருற்சவமாகக் கொண்டாட தம்பதிகள் சுகமே வாழ்ந்திருந்தனர். சில தினங்களுக்குப் பிற்பாடு அரசனும் தேவனடி சேர அதன் பின் அவன் குமாரன் முடி தாங்கி முன்னோரினும் பன்மடங்கு பட்சத்துடன் குடிகளை அரவணைத்துத் திறத்துடன் சத்துருக்களை வென்று பல யாகங்கள் செய்து தேவர்களுக்கு அவிர்ப்பாகமீந்து தன் பேரால் அரனருள்புரி (திருவையாறு) என்று நகரமுண்டாக்கித் தந்தையைப்போல் தானுந்தவமிருந்து தன் மனைவி தாணியைவிட்டுக் கானகமேகினன். நாவு அசைந்தால் நாடசையவும் தலையசைந்தால் தாணியசையவும் உடலசைந்தால் ஊர் அசையவுமாக விருந்த மன்னனுக்கு 'மனமில்லை பிராமணனா' னென்று கூறுதல் இயலுமல்லவா?

ல. அனந்தய்யர்,

## ஞானாம்பிகை.

### அங்கம் I.

### அவித்யாபுரம் மோஹன் கொலுமண்டபம்.

:(o):

டம்பன், கண்டு:—நம் சாமர்த்தியம் யாருக்குவரும். நாம் இந்த உலகமனைத்தையும் ஒரு சுற்றுசுற்றி இப்பொழுது ஸ்வமரைவிட்டு இறங்கி வருகிறோம். நமது அரசன் வருவதற்கு, என்ன இன்னும் தாமதம், என்ன மயக்கத்தில், மயங்கிக்கிடக்கிறாரோ; இப்பொழுது காலத்தில் சபைக்கு வருகிறதில்லையோ.

விகடன்:—ஓய் கந்தபுராணமெல்லாம் புளுகிகொண்டு இங்கு எங்கு வந்தீர்; (மகேருமுதுகில் மஹாதேவனுக்கு கதவு ஒரு அப்பளாம்) என்பதுபோல் இப்பொழுது தான் நாலுநாளைக்கு முன்னே உம்மைக்கண்ட ஞாபகமாயிருக்கு, இப்போதான் ஸ்வமரில் இருந்து இறங்கினேன் என்கிறீர், என்னமோ அண்டமாதிரி வீசையை முறுக்கிக்கொண்டீர், என்ன வெள்ளைக்குதிரை வழியிருக்கிறீரோ? (மனதுக்குள்) (சோந்தைகளே, அப்பா நல்ல கூட்டம் ஒன்று; குலத்துக்கேற்ற கோடாலிக்காம்புமாதிரி; உனக்கு அவன் ஏர்வை, அவனுக்கு நீ ஏர்வை.) எங்கே எங்கே போயிருந்தீர் என்ன சமாசாரம் சொல்லும்.

டம்பன்:—என் சாமர்த்தியம் உனக்குத்தெரியாதா? அவனை இந்த தேசத்திலேயே இல்லாமல் செய்துவிட்டால் நமது காரியம் நன்றாய் விளங்கும் இந்த முதலில் ஒரு ஏற்பாடுபண்ணினேன், அந்தப்பயலே சின்

றுபின்னமாகப்பிரித்துவிடுவதற்கு, வேண்டிய ஏற்பாடுகளை செய்தேன். டம்பதுரையை நாமு நினைத்தால் என்ன காரியம் முடியாது.

விகடன்:—ஆ! ஆ! அன்று, எனக்குத்தெரியாதா? உமது சாமர்த்தியம் (மனதிற்குள்) (முதல் பாக்குவெத்திலை உமக்குத்தானே கொடுக்கவேண்டும்.) இவ்ராவன் நினைத்தால், என்ன காரியம் முடியாது தமது ஆத்துக்காரியை எங்குவிட்டு தேசாந்தரம் போனீர்? எஜமான் வருகிறவார். உம்ம சடையைக்கட்டும்; டிரஸ்ஸை சரிப்படுத்திக்கொள்ளும், சொல்லுவதைப்பொருந்தச்சொல்லும், கெட்டிக்காரன் புளுகு எட்டுநாளில் தெரியும் என்றமாதிரி உம்முடைய சவுடால் எல்லாம் வெளிவந்துடப் போரது. உமது தம்பி, தாயன், எங்கே காணவேகாணும். அவன் ஆம் படையான் தபோமதி சவுக்கியமாய் இருக்கானா?

டம்பன்:—அந்தப்பயல் பேச்சை என்னிடத்தில் பேசாதே. அவன் சோம்பேரித்தனமாய் எஜமானுக்குத் துரோகம்பண்ணத் துணிந்தான். அவன் பெண்மயக்கத்தில்முழுகிப்போய் அவன் இஷ்டப்படி சட்டமாக தின்டாடுகிறான், என்னமோ போரான் நமக்கு ஒன்றும் குறையில்லை.

விகடன்:—அதோ எஜமான் வந்துவிட்டார், எழுந்திரும் எழுந்திரும் (சபையைப்பார்த்து) எஜமான் வருகிறார் எழுந்திருங்கள், எழுந்திருங்கள்.

மோஹன்:—மந்திரி! இன்று நான் சபைக்கு வருவதற்கு டயம் ஆயிற்றோ? அந்தப்புரத்தில் போயினேன், கொஞ்சம் காரியமாய் இருந்துவிட்டேன். நமது அரசாட்சியிலுள்ள தேசத்தைபபோய் நீர் பார்த்திருக்கிறீரா? நமது அரசே அரசு; நமது செங்கோல் செல்லாதவிடம் இல்லை. எங்கும் கண்டாலும் நமது கொடி பறந்துகொண்டிருக்கிறது.

அகங்காரன் மந்திரி:—ஆம்! ஆம்! பிரபோ! தங்கள் காலத்தில் நமது தேசத்தில் உண்டாயிருக்கும் அதிசயங்களைநாம் ஒருபோதும் கண்டதில்லை தமது நியாயமே நியாயம், வாழ்வே வாழ்வு.

விகடன்:—முட்டிக்கால்போட்டு நமஸ்கரித்து, பிரபோ! இதோ; தங்கள் வெளியூர் ஓடுகாலி டம்பதுரை வந்திருக்கிறார். சமாசாரமூட்டையை சுமந்துகொண்டிருக்கிறார். ஜேப் போட்டுவிடுவார்போல் தோன்றுகிறது. ஒன்று ஒன்றாய் வாங்கிக்கொள்ளுங்கோ (மனதிற்குள்) இவனையும் எஜமானையும் சேர்த்துவிட்டால் வேடிக்கை பார்க்கலாம்.

மோஹன்:—(My dear) மை டியர், வாரும் வாரும் எப்பொழுது வந்தீர்?

டம்பன்:—(மீசையை முறுக்கிக்கொண்டு) நாம் இப்பொழுது தாம் வந்தோம்.

மோஹன்:—தேகம் சவுக்கியமா? தாம் சென்ற காரியம் காயா? பழமா?

டம்பன்:—நமக்கு சவுக்கியத்திற்கு யாது குறை, இவ்வுலகனைத்தையும், நாம் ஒரு திருணமாத்திரமாக எண்ணியிருக்கிறோம். சூரியனை வேண்டுமானால் உதிக்கபண்ணுவோம். வேண்டாமென்றால் நிறுத்திவிடுவோம். சந்திரனும் அப்படியே, இந்திராதிதேவதைகள் எல்லோரையும் நாம வசப்படுத்திக்கொண்டிருக்கிறோம், நேற்றுத்தான் பிரம்மலோகத்தில் இருந்துதூர் தூதன் எம்மை அழைக்கவந்தான், இப்பொழுது நம்மால் வர முடியாதென்று கூறினோம், நமது சிஷியர்கள் என்னவோ போர்வழிகளை மொட்டையிட்டு சாவிகட்டி தமது சொந்தகாரியமாக வெளிவிட்டிருக்கிறோம். அநேகமாகத் தாங்கள் சொல்லியபடியே முடித்திருக்கலாம். என்று எண்ணுகிறேன்.

விகடன்:—எ ன; புஸ் என்று சிர்வாணம்போல், பிரமாதமாகக்கீர்த்தியைச்சொல்லிக்கொண்டுவந்த கடைசியில், புசுக்கென்று போய்விட்டது.



எதாவது முடித்ததா இல்லையா? தொடபுடலாய் பேச்சை வளர்க்கிறீர் காரியத்தில் ஒன்றையும் காணுமே. நீர் பிரவிருத்தித்த காரியத்தை முடித்தீரா இல்லையா?

டம்பன்:—என்னடா? நான் ராஜசபையில் பேசும்பொழுது வீண் வார்த்தையெல்லாம் பேசுகிறாய்; உஸ், உஷார்!

விகடன்:—என்னத்தானும் டா போட்டுப்பேசுகிறீர். உம்மிடத்தில காரியத்தைக்கேட்டால், ஆதமப்பிரஸம்சை அஷ்டமாத்தியாயத்தை ஆரம்பிக்கிறீர், என்னமோ ஸ்வாமின் இறங்கினேன் என்றீரே அங்கிருந்து வந்த சங்கதி மூட்டையை அவிழும்:

டம்பன்:—ஆம் ஆம் மறந்துபோனோம் சொல்லுவோம்? ராஜன் முகத்தைப்பார்த்த, பிரபோ? அமெரிக்கா முதலிய மேற்குதேசத்தாருக்கு தமது செங்கோலின் கொடியை, நாட்டுவதற்காகச்சென்றேன், அங்கேயும் (தாம் அவனைக்குறித்து எமக்குச் சொலலியிருந்தீரகளே அதைபற்றி ஏற்பாடுசெய்தேன்.) கூடியசீக்கிரம் நமகாரியம் கைகூடவேண்டுவதுதான் ஒருபோதும் இதமைன் அவனை அடையான். அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்தாய்விட்டது.

விகடன்:—எல்லாம் வழவழா கொழகொழா என்றுதான் இருக்கு; காரியத்தின் பூர்த்தியைக்காணோமில்லை.

மோஹன்:—நல்ல, உன்னை அவன் ஊர் கோலி என்றது வாஸ்தவமே, இரண்டு நாழிகை பாயமாதிரி பேசுறாய். ஒன்றும்பலனைக்காணவில்லை.

டம்பன்:—பிரபோ! அப்படி நினைக்கலாகாது, முடிவிற்பலனைப்பார்த்துக்கூற வேண்டும்.

மந்திரி அகங்காரன்:—அரசனைப்பார்த்து எதாவது ஏற்பாடுசெய்திருக்கக்கூடும், ஆனால் ரகசியமாய் இருக்கலாம், இப்பொழுது சொல்லக்கூடாதுபோலும்.

டம்பன்:—ஆம் ஆம் (மந்திரியின் காதில்) கூட்டில் ஏற்றி விளப்பிவிட்டாய்விட்டது.) தாம் ஒன்றும் யோசிக்கவேண்டாம்—நாம்போன காரியம் முடியாமலா இருக்கும்?

விகடன்:—அதோ மாத்ஸரிய பிரபு வருகிறார். அவரும் இவருக்கு (மெதுவாக விளப்பன்தான்) வாருங்கள் வாருங்கள் எப்பொழுது வந்தீர்கள்.

மாத்ஸரியன்:—(விகடனைத்தனியாக அழைத்து) டம்பன் அரசனிடத்தில் யாது கூறினான்

விகடன்:—ஏய் ஏன் என்னைக் கேட்கிறீர். உங்களவன்தொழில் என்னிடத்தில் இல்லை. எனக்கொன்றும் தெரியாது. பாப்பாத்தியம்மா மாடு வந்தது என்று நான் என்னமோ, காலம்தள்ளிக்கொண்டிருக்கிறேன் என் தலைக்கே பாக்குப்பிடிக்கிறாப்போலே இருக்கே.

மாத்ஸரியன்:—உனக்கு ஒன்றும் தெரியாதா; நீ சபையில் இல்லையா; உண்மையைச்சொல்.

விகடன்:—உங்களைப்போல் அங்குசொல்லியதை இங்குசொல்லுவது இங்குசொல்வதை அங்கு சொல்வது முதலிய மாராட்டமாரடிப்பு எனக்குத்தெரியாது உங்கள்பாடு நான் ஓட்டமாய் ஓடிப்போறேன்.

மோஹன்:—சேவக மாத்ஸரியனை பக்கதே சீக்கிரத்தில் அழை.

மாத்ஸரியன்:—பிரபோ வந்துவிட்டேன் வந்த சிரமத்தை தணித்துக்கொண்டுவந்தேன்.

மோஹன்:—நீர் சென்ற காரியம் முடிந்ததா?

மாத்ஸரியன்;—ஐயா! அந்தப்பயல் ஞானாம்பிகையை அடைந்துவிடுவது நாம் பார்த்துக்கொண்டிருப்பதா?. மூமுக்ஷுபுரத்திற்குப்போனோம். அங்கு நடக்கும் சமாசாரத்தை என்ன சொல்வோம். உயர்ந்த நற்கனாலமைந்த கொலுமண்டபத்தில் நவரத்னங்களாலிழைத்த சிம்மாஸனத்தில் அந்த ஹம்ஸன் உட்கார்ந்திருந்தான், நாமேபோய்ப்பார்த்தோம், இப்பேற்பட்ட செல்வம் இவனுக்கு இருக்கலாகுமா? இதை நாம் எவ்வித்தும் ஒழித்து இவனை நமது அரசனான மோஹபதிக்கு அடிமையாக்கிவிடவேண்டுமென்று எண்ணினேன்; அப்படியே நமது தேவியையும் பிரார்த்தித்துக்கொண்டேன், அப்பொழுது அவனது சபையில் ஓர் தூதன்வந்தான், அத்தூதனால் ஓர் பத்திரிகைகொண்டுவரப்பட்டது. அதை அவ்வரசனது மந்திரி அரசனுக்குக்காட்டிவிட்டு தனது பையில் வைத்துக்கொண்டான், அதை நான் ஒருவருக்கும் தெரியாமல் எடுத்து எழுதிக்கொண்டேன், அதைப்படிக்கிறேன்.

ராஜாதிராஜ, மூமுக்ஷுபுராதிபதியாகிய ஹம்ஸராஜனுக்கு சகல மங்களமும் உண்டாகுக! நீர் எம்மிடத்தில் அன்புடன் இதுகாறும் பக்தி பண்ணியதற்காக எனது அன்புள்ள சிஷ்யனான பிரமபுரத்தரசனான குருராஜனது புத்திரி ஞானாம்பிகைக்கு உனது குணாதிசயங்களைத்தெரிவித்தேன், அவள் உன்னைப்பார்க்கப்பிரியமுடனிருக்கிறாள்.

இங்ஙனம்,
சிவானந்தபண்டிதர்.

ஆனதால் நாம் உடனே நமது காரியத்தைப்பார்க்கவேண்டும். மற்றும் அப்பட்டணம் மிக்க அலங்காரமாகவும் இருக்கிறது அப்பட்டணம் தங்கனைப்போன்ற பிரபுக்களே வசித்தானது; அவனிடத்தில் உயர்ந்த பத்மினிச்சாதிஸ்திரீகளும், அசுவங்களும், கஜங்களும், இருக்கின்றன. அவைகளைநாம் எப்படியாவது கைப்பற்றிக்கொள்ளவேண்டும்.

டம்பன்:—ஆம் அங்ஙனமே அதைப்பற்றி யோஜிக்கவேண்டுவதுதான், நானும் அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்திருக்கிறேன் நாம் அவ்வரசனுக்கு ஒரு தூதனை அனுப்பவேண்டும்.

விகடன்:—நாம் எதைச்செய்யினும் நமது குரோதப்பிரபுவை அனுப்பினால் எல்லாக்காரியமும் முடிந்துவிடும், எதையும் சீக்கிரத்தில் முடித்துவிட அவரையன்றி ஒருவராலும் முடியாது, அவரை அவ்ஹம்ஸனிடத்தில் தூதனாக அனுப்பினால் சண்டையை இழுப்பார் சண்டைக்கேடுபடி மாடு பிடி என்று அவர் வம்பர் மஹாராஜனசபையில் அதிரசேனர். ஆனதால் அவரை அனுப்புவதே உசிதம்.

டம்பன்:—ஆம் அங்ஙனமே.

அகங்காரன்;—நமது மூத்தண்ணாவான அவர்தான் இந்த வேலைக்குக் கெட்டிக்காரர் அதிற் தடையில்லை.

மோஹன்;—அவனை விருதாவாக அழைக்கலாமாகூடாதே அதற்கு என்னசெய்வது.

மந்திரி;—நமது மாத்ஸரியப் பிரபுபோயிருந்தகாலத்தில் அவருக்கு மரியாதை செய்தானா இல்லையே அதையே காரணமாக யுத்தத்திற்குப் போகலாம்.

மோஹன்:—ஆம் அங்ஙனமே மூத்தண்ணா தாங்கள் போய்வருவீர்களா.

குரோதன்.—போய் வருகிறேன் என்றான் சபையும் கலைந்தது.

—(;0;)—



நமதுதேசத்தில் ஆதிகாலம் தொடங்கி, வழங்கிவரும் அத்துவைதம் விசிஷ்டாத்துவைதம், துவைதம், சைவம் முதலிய மதங்களைப் பரிபாலனம் பண்ணவும், அவ்வம்மதக்கொள்கைகட்குதவறு உண்டாகும் காலத்தில் அதைத்தடுக்கவும் அம்மதச்சிஷ்யர்கட்கு, உபதேசஞ்செய்வதற்கும், ஆங்காங்கு உள்ள தேவாலயங்களைப் பரிபாலனம் செய்வதற்கும். பூர்வாசாரியர்கள், தம்தம்பரம்பரையில் உண்டானபண்டிதர்களும் விரக்தர்களுமான, சிஷ்யர்கட்கு உபதேசித்து, மடங்கட்கதிபர்களாக்கி, நீடூழிகாலம் சிஷ்யபரம்பரை அபிவிருத்தியாவதற்காக, மடங்கட்கு ஏராளமான ஐசுவரியங்களை ஏற்படுத்தி, அவைகளையும் அவர்களிடத்தே கொடுத்தார்கள். அங்ஙனமே தேவாலயங்கட்கும். பூமிகளைவிட்டு அவர்களிடத்து பரிபாலனம் பண்ணும் பொருட்டுக்கொடுத்தார்கள். முற்காலத்தில் அப்பரம் பரம்பரையில் வந்தமஹான்கள் அங்ஙனம் நடாத்தி சிஷ்யர்கட்கு ஞானோபதேசஞ்செய்து; சமயபரிபாலனத்திற்கென்றே பண்டிதர்கட்கு பரிசளித்து, தேசந்தோறும் உபந்நியசிக்கவும், சாஸ்திரங்களைப் பாடம் சொல்லவும் ஏற்படுத்தினார்கள், தேவாலயங்களும் செவ்வையாய் பரிபாலனம் செய்யப்பட்டன.

இக்காலத்தின் நிலைமையைச் சிந்திக்கப்புகின் எழுதுகோலும் கையும் நடுங்குகிறது. தற்காலத்திய மடாதிபதிகளிடத்திற் சிலர் மடத்துச்சொத்துகளை தங்கள் விநியோகத்திற்கென்றே அமைத்தனர், மருண்டு, வீண்செலவில் துணிந்தார்கள், சமயபரிபாலனத்திற்கென்றும் தேவாலயபூஜைகட்கென்றும் உத்ஸவங்கட்கென்றும். சாதுக்கள் உண்பதற்கென்றும், அமைத்த திரவியங்கள், வைக்கோல்கட்டும் நாடகத்திற்கும், தாசிகட்கும், விகடகவிகட்கும், சோம்பேரிகட்கும் பொய்யர்கட்கும், வஞ்சகர்கட்கும், குடியர்கட்கும் கொடுக்கப்படுகின்றன; அநேக தேவாலயங்களுக்காக பரமேசுவரனது சிரஸில் சந்தனமும் பன்னீர் முதலிய வாசனைத்திரவியங்களை; அபிஷேகம் செய்யவில்லை என்றுகண்டு வெளவால்மஹரிஷிகள் தாமாவது அபிஷேகம் செய்வோமென்று, கூட்டம் கூட்டமாக கர்ப்பகிரஹத்திற்குள் குடிகொண்டிருக்கிறார்கள் கோயிற்குள் புகுந்தால் வெளியில் எப்பொழுது போவோம் என்று தோன்றுகிறது, ஏராளமான ஐசுவரியமுள்ள தேவாலயங்களில் பரமசிவனுக்கு, துர்நாற்றம் வீசும் வெகுகாலப்பழமையான கிழிந்த துணிகளைத்தான் அர்ப்பணம் பண்ணப்படுகிறது. கோவில்களில் நடந்த அநேக உத்ஸவங்களும் நிறுத்திவிடப்பட்டன. அநேகமாகசுவாமிக்கு ஒருவேளை நைவேத்தியமும் கிடைப்பதும் அருமையே விளக்குகளும் மிக்கக்குறைக்கப்படுகின்றன. அந்தோ காலக்கொடுமைக்கு என்னசெய்வோம், நமதுமதமும் நமது ஆசாரங்களும், வரவர குறைந்து வருகின்றன, அநேக மாகச்சிறுவர்கள் சந்தியாவந்தனத்தையொழித்தார்கள் திருநீறு திருமண்காப்புப் போட்டுக்கொள்வதில்லை. சிறுவர்கட்கு அந்நியமதஸ்தர்களால், நமது ஆசாரத்தை, வெறுக்கக்கூடிய அநேகயுக்திகளும் போதிக்கப்படுகின்றன பாதிரிகள் தங்கள் பள்ளிக்கூடங்களில், பைபில் முதலிய புஸ்தகங்களைப்போதிக்கிறார்கள், அநேகமாக அந்நியமதஸ்தர்களுடைய அபிப்பிராயங்களே நம்மவரிடத்தில் நிறைந்துவிட்டன. நம்மசத்து சம்ஸ்கிருதம் திராவிடம் முதலிய புராதீனபாஷைகளின் வழக்கமும், குறைய நேர்ந்தன. இங்ஙனமே நமது சமயநெறிகள் குறைவுபடுவதை வெகுசீக்கிரத்தில் நமது ஆசாரங்களை குறைத்துவிடும் மடாதிபதிகளே. உங்களிடத்தில் நாங்கள் மன்றாடி கேட்டுக்கொள்வது யாதெனில் [illegible] தான சமயபரிபாலனத்திற்கென்று ஏற்பட்ட ஐசுவரியங்களை

திற்சிலவிடமுயலுங்கள். தேவாலயங்கட்கு ஏற்படுத்திய திரவியங்களை பாதியை நீங்கள் எடுத்துக்கொண்டாலும் பாதியைக்கொண்டு எவ்வளவோ சிறப்பாக நடத்தலாம்.

ஆகோர்க்கு சமயபரிபாலனத்திற்கென சமயநூல்களைப் போதிக்கும் பாடசாலைகளை ஏற்படுத்தி அவைகட்குத்தக்க பண்டிதர்களை உபாத்தியாயர்களாக்கி, பிள்ளைகளுக்கும் அன்னமிட்டு படிப்பிக்கவேண்டும். அப்பிள்ளைகள் சமயசாஸ்திரங்களைப் படிப்பதுடன் ஜீவனத்திற்குவேண்டிய லௌகிகசாஸ்திரங்களையும் படித்தல்வேண்டும். அவர்கட்கு மதவிஷயமாக உபந்நியாசிக்கும் திறமையை உண்டாக்கி கிராமங்கள் தோறும் நமது மதோபந்நியாசத்தைச் செய்யும்படி பயிற்சி செய்விக்கவேண்டும்.

தேவாலயங்களின் ஆயிரக்கால் மண்டபங்களில் தினந்தோறும் உத்தம புராணங்களை உபந்நியாசிக்கும்படி செய்யவேண்டும். தேவாலயங்களில் பூஜை செய்யும் குருக்கள் முதலியோருக்கு ஆகம சாஸ்திர பயிற்சியை அபிவிர்த்திசெய்யவேண்டும் இப்பொழுது அநேகமாக குருக்கள் ஜாதியில் சிலர் தவிர மற்றவருக்கு கல்வியே தெரியாதெனத் தெரிகிறது. ஆனதினால் அச்சாதிப்பிள்ளைகட்கு ஆகம சாஸ்திரத்தில் தேர்ந்த பண்டிதர்களைக்கொண்டு அச்சாஸ்திரங்களை செவ்வையாய்ப் படிப்பிக்கவேண்டும்.

நமது மதவிஷயாபிப்பிராயங்களடங்கிய துண்டுபத்திரிகைகளை பிரசுரித்து எல்லோருக்கும் கொடுக்கவேண்டும்.

சிறுவர்கள் படிக்கும் நம்மவரது ஆங்கிலேயபாஷாப் பள்ளிக்கூடங்களிலும் நமது சமயாசாரத்தை, உபதேசஞ்செய்யக்கூடிய பண்டிதர்களை உபாத்தியாயராகவமைத்து, தினம் ஒரு மணியாவது, அவர்களைக்கொண்டு நமது சிறுவர்கட்கு சமயநெறியைப் போதிக்கவேண்டும், சந்தியாவந்தனாதிகள் மறந்து போகாமல் இருக்கும்வண்ணம் மனனம் செய்விக்கவேண்டும், சிறுவர்கட்கு நல்ல ஆசாரத்தை அப்பியசிக்கச் செய்யவேண்டும்.

பண்டிதைகளான ஸ்திரீகளை நமது ஸ்திரீகளுக்கும் நமது சமயாசாரத்தை போதிக்கவேண்டும், ஐம்பது வயதிற்கு மேற்பட்ட விதவைகளான பண்டிதைகளைக்கொண்டு கிரகங்கள் தோறும் சென்று பதிவிருதா தருமங்களையும் வாருணியத்தின் இலக்ஷணங்களையும் இல்லறத்தின் தருமங்களையும் சிசுக்களை இரக்ஷிக்கும் வழியையும், அவசியமாகவேண்டிய வைத்தியக்குறிப்புகளையும், பரமேசுவரனை ஸ்தோத்திரம் பண்ணக்கூடிய, உத்தமமான தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி முதலிய உத்தமஸ்தோத்திரங்களையும் போதிக்கசெய்யவேண்டும்.

நமது சிறுமிகட்கென பாடசாலைகளைஸ்தாபித்து அவைகளில், நமது பாஷைகளை கற்பித்து, அவர்கள் தக்கவயது வந்தவுடன் தனது கிரகத்தில் நடத்தவேண்டிய காரியங்களைச் செவ்வையாய்ப் போதிக்கவேண்டும். இப்பொழுது நமது சிறுமிகள் பாதிரிகள் பாடசாலையில் படிக்கிறார்கள் அவைகளில் கிறிஸ்துமதக்கொள்கைகளும் அந்த மதத்தின், ஆசாரங்களும் போதிக்கப்படுகின்றன அப்போதனையில் மயங்கிய சிறுமிகள் பருவகாலத்தில் அவ்வாசாரத்தை மேற்கொண்டு நம்சமயநெறியை, கைவிட்டு அம்மதத்திலேயே பிரியமுடையவர்களாய் அவர்களோடு சேர்ந்துவிடுகிறார்கள். அருப்பாடுபட்டு பெற்றெடுத்த தாய்க்கு இதைவிடத்துக்கம் வேறென்ன வேண்டும். இப்படியே எவ்வளவோ சிறுமிகளும், சிறுவர்களும் கிறிஸ்து மதத்தில் சேர்ந்திருக்கிறார்கள், ஆனதால் பிரதி பள்ளியில் நமது சிறுமிகளையும் சிறுவர்களையும் போகவிடாமல் தடுக்க நமது சமயாசாரத்தைப் போதிக்கக்கூடிய பாடசாலைகளை ஸ்தாபிப்பதையன்றி வேற [illegible] ஆனால் இத்தகையகாரியங்களில் ப்ரவிருத்திப்பதே இக்கா[illegible] [illegible]வேண்டிய முக்கியமான தருமம் வரும்.



ஆங்கலியுகத்துளிப்பரதகண்டத்துள் ஆரிய ஆண்மக்கட்களெல்லாரானுமதாய தந்தையர்கள் புரியுங்கருமங்களாகிய ஜாதகாமம் நாமகர்ணம் அன்னப்பிராசனம், சௌளம் வித்தியாரம்பம், உபநயனம் ஆகிய இவைகள் முடிந்தும் பிரமசாரியாகியதண்டம் கமண்டலம் தர்ப்பமுடி, மௌஞ்சி அரைஞாண் இவைகளைத் தரித்து பிக்ஷான்னம் புசித்தல் வேதாத்தியயனம் செய்தல், குருவின்வீட்டில்வசித்தல், குருவுக்குசிசுருஷைசெய்தல், உபதேசம் பெறல முதலானவிரதங்களையும் அனுஷ்டித்து வருவதோடு குருவினிடத்து வித்தைகற்று உபதேசம் பெற்றுக்கொண்டபின் குருதக்ஷிணை கொடுத்துக் குருவினுத்திர வேற்று "இல்லற மல்லது நல்லறமன்று" எனும், ஔவையார் இனியதிருவாய்மொழியைக்கடைப்பிடித்துக் குலாசாரதந்த் கொடுத்தபெண்ணாய் " பெண்களுக்கழகு மைக்கும், ஆபரணம் பூண்டபெண்ணைக்கல்யாணம செய்துகொண்டு, பொய்சொல்லாமை, களவு செய்யாமை, பிறமனைவியின்மீது காதல்கொள்ளாமை முதலிய நற்குணநற்செய்கைகளோடு, மாசற்றபக்தியாய்ம் கடவுளை கருதிவில வாணறு நன்மைகளோகுங் கிரஹஸ்தாசிரமமாவது| கிரியை எனப்படும், கிரியையெனும் பதத்திற்கோ! வேலை, அல்லது கர்மம் என அர்த்தம், மனிதர்கள் செய்யும்படியாய்ச் சாஸ்திரத்துள் கூறப்பட்டவிகைகர்மங்களாகிய நித்திய, நைமித்திக, காமிய, பிராயச்சித்தமெனும் நான்கும், அன்றன்றனகளுள் ஸகாம நிஷ்காமகர்மமென்றிரண்டு வகையுண்டெனவிவ்வாறுன்றோர் கூறியுள்ளார் இக்கர்மங்களியாவையும் வழுவுறுநன்கு விளங்க நடத்துவரேல் அளவிலாப் புண்ணியமுண்டாய்ப் பேரின்பவெள்ளத்துள்ளழுந்துத் திக்கெலாம் புகழ்ந்தேத் தப்படுவரென்றேப்புராணமுமியம்புமாதலாலிவைகளை நாமெலாமனுஷ்டித்து வருவதத்தியாவசியகம் நித்தியகர்மமாவது? ஸ்நானம் சந்தியாவந்தனம், மூர்த்திகள் ஆராதனம் முதலியவைகள் நைமித்திகமாவது? உபநயனம்,விவாகம் சீமந்தம் முதலான சுபகாரியங்களும் சிரார்த்த திதலான அசுபகாரியங்களுமாம் காமியகர்மமென்பது? ஓர்பலனையடையக் கேமதிவேதத்திற் சொல்லிய யாகயக்ஞதான தவங்களைச் செய்தல் முதலியவாம், பிராயசித்தகர்மமாவது தெரிந்தோ தெரியாமலோ செய்தபாபச்செய்கைகளும், அறிந்தோ அறியாமலோ செய்யவேண்டிய கர்மங்களைச் செய்யாமல் விட்டதற்காகப் பிராயசித்தமாகச் சிலதர்மங்களைச் செய்துப் பரிசுத்தமாக்கிக் கொள்ளுதல் முதலியன இவைகளினுட் பிரமமுக்கு காமியகர்மமெனும் ஸகாமகர்மமென்பது குடும்பவிர்த்தி, தனதானியவிருத்தி, சுவர்க்கலோகயோகப்பிராப்தி இவைகளையடைவதற்காகச் செய்யுங்கர்மங்களேயாம். நித்தியானந்த மோக்ஷசாம்பிராச்சியத்தைக் கொடுக்கும் உத்தமமான கர்மங்களாகிய நிஷ்காமகர்மமென்பது! ஓர் பலனையுமிச்சியாது எல்லாம்பகவானருளால் நடந்துவருகிறது நமக்கு ஒரு அதிகாரமுமில்லையென்று நினைத்துச் சத்கருமங்களைப் பலனைத்தியாயச்செய்வது இவைகளியாவும் சாஸ்திரோக்தமேமேனும் பூர்வம் மனிதர்களின் குணத்திற்குந்தொழிலுக்குந் தக்கவாறவர்களுக்கு ஜாதிபேதமுண்டாயின. அதாவது பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர என்பவைகளே இவ்வருணங்களுக்குள்ளெவ் வருணத்திற் பிறக்கினும் அவ்வவ்வருணத்துக் குறியகர்மங்களாகிய ஆசாரங்களையனுஷ்டித்துப் புலையையும், கொலையையும், களவையுந்தவிர்த்துப் பிறதாரத்தின் மேலாசை வையாது தன் தாரத்தையே யந்தரங்கத்தோடு கொண்டு முற்கூறிய கர்மங்களியாவையும் வழுவுற நடத்திவருவோர் [illegible] [illegible]வன் பொருள்வைநேபுழி, எனதெய்வப்புலமைத் திருவள்ளுவ[illegible] வாய் மலர்ந்தருளியவாறு பசித்தார்களன்னமிடல் முதலி

டிய தர்மங்களை முறையே நடத்திப் பொறுமை, தயாளம், கடவுள் பக்தி முத லிய நற்குணங்கள் வாய்ந்த நாகரிமத்துவிருப்பவர்கள் இவர்கள் கைக் கொண்ட முதலிரகஸ்தாச்சிரமம்.

## பெண்களுக்கழகமைக்கும் ஆபரணம்.

கடல்சூழ்ந்துள்ள இப்பெரும் பூமியின்கண் பெண்களுக்கழகமைக் கும் ஆபரணமாவது வெள்ளியினாலும் பொன்னினாலும், நாகத்தினாலும் நவரத்தினங்களாலும் தலை முதல் கால் வரையணியும் ஆபரணமன்று பின் எதுவோவெனில்

பெண்ணிற்பெருந்தக்கயாவுளகற்பெனுந்
திண்மையுண்டாகபெரின்

எனத்திருவள்ளுவநாயனார் திருவாய்மலர்ந்தருளிய வண்ணம், உல கில் பெண்களாய் ஜனனமெடுத்தவர்கள் அவர்களுக்குரிய நாணம்; மடம், அச்சம் பயிர்ப்பு எனு நான்குகுணங்கள் அமைந்திருப்பது அதி அத்தியா வசியம் அஃதெவ்வாறெனில் ஜனன முதல் கன்னிகைகளாகு மணவா ளம் வரைதாய் தந்தையாதினத்திலிருந்து மணமுடிந்தவுடன்,

கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை

எனும் ஔவையார் திருவாக்கைக் கடைப்பிடித்து அவர் எவ்விதம் பகலினும் மேற்படிக்கு நடந்து கொள்வதோடு கறந்த பால் கறந்தபடி உண் மையாய் கணவன் விஷயத்திலொழுகுதலும் முற்கூறிய நான்கு 1-எல் லாம் அறிந்தும் அறியாதபோலிருத்தல் 2-எனதும் காணுதனைக்கண்ட விடத்து அஞ்சுதல் 3-தன் கணவனல்லாரை மேற்படின் சரீரம் அரு வருத்தல் 4-இந்நான் குணமுடைத்தலும், கணவனுக்குப் பாதப்பணி விடை செய்யும் தாதிபோலும், சமயோசித மறிந்து நல்ல போசனை சொல்லும் மந்திரிபோலும், சலியாத பொறுமையுள பூமாதேவிபோலும், கல்வியில் வேசைபோலும், இனியஉணவுகளால் போஷிப்பதில் அன் புள்ள தாய்போலும் இருப்பதன்றிக் கணவன்கோபித்தத் அனுக்கிரகித் ததாகவும், வைதால் தன்னைவாழ்த்தினதாகவும் எண்ணுவதால் அண்டைவீ டையல் வீட்டுக்கடிக்கடிசொல்வது நிக்கிரகித்ததால் கரியஞ்செல்ல வேண்டிய தெய்விடத்திற் குக்கணவனேனும் பெண்துணையேனுமின் றி வனுவழிபோகல் கூடா இது வேகற்புகற்புடைய ஸ்திரீகள் கணவ னது பாதம் விளக்கிய ஜலத்தைத் தீராபாவத்தைப போக்குமகங்கா தீர்த் தமாகவும் அவன் புசித்த எச்சலை தேவதாபிரசாதமாகவும் அவன் பா ததரிசனததை பரமார்த்ததரிசனமாகவும் அவன் வாய்மொழியைக் குரு ...தமாகவும், பொன்னவேனுமேயன்றி வேறேதீர்த்தம் பிரசாதம், தரி சனமும் முத்திபேறுபதேசமுண்டென்று கொள்ளல் கூடாது இதற்கே அவா ...மனைத்தப்பெற்பவிஷயங்களில் பிரவேசிக்காவண்ணம் நிலைநிறுத்திக் கற் பைக்காட்டு பெண்களுக்கழகமைக்கும் ஆபரணம்.

மு. திருமாலழகுபிள்ளை.
முன்னையம்வாசகம்.

## வர்த்தமான குறிப்புகள்.

### ஸ்திரீகளின் தைரியம்

அமர் ஒரு வாரத்திற்கு முன் ஒரு நாள் மாலை 7 மணிக்கு ...ப்பட்டணத்திலிருந்து சிந்தாதரிப்பேட்டை அய்யாமுதலித் தெரு வழியாய்த் திருவல்லிக்கேணிக்குக்கால் நடையாய் வந்து கொண்டிருந்தேன் சிந்தாதரிப் பேட்டை மார்க்கெட்டுக்கெதிரில் சற்று நின்றேன், என்னை ஒரு வயது சென்ற ஸ்திரி ஐயா என்று கூப்பிட்டாள் ஏன் என்று கேட்டேன். அவளுக்குப் பின்னால் சுமார் 20 வயதுள்ளவர்களாகிய இரண்டு ஸ்திரீகள் நின்று கொண்டிருந்தார்கள் அவர்களிருவரும் லக்ஷணமாயும் குடும்ப ஸ்திரீகளாகவும்காணப்பட்டார்கள் கையில் துணி மூட்டைவைத்திருந்ததா ல் அசலூரிலிருந்து வந்தவர்களாகக் காணப்பட்டார்கள். வயது சென்ற ஸ்திரி மற்ற இரண்டு யுவதிகளையும் காட்டி ராத்திரிக்குப் பட்டினியா யிருக்கவேண்டியிருக்கிறது, ஏதேனும் பொருளுதவி செய்யவேணுமென்று கேட்டாள், நான் வயது சென்றஸ்திரீயை தூரக்கூப்பிட்டு நீ எவ்வூர் அவர்கள் யார், இங்கு வந்த காரண மென்ன வென்றேன். அவள் நாங்கள் செட்டி ஜாதி யென்றும், நாங்கள் மூவரும் ஒருவர்க்கொருவர் சகோதரிகளென்றும், அவ ர்கள் புருஷர்கள் குடும்ப மனஸ்தாபமித்தம் கேட்டாருக்குப் போய்விட்டதாயும், அவர்கள்சொந்தபுருஷனை தேடிவந்ததாயுமவ ர்கள் காஞ்சீபுரமென்றும் சொன்னாள் நான், அவர்கள் மனோபா வத்தைப் பரீக்ஷிக்க என்னுடன் கூடவருகிறீர்களா. உடனே ரெயிலேறி தேசாந்திரம் போய் சுகமாயிருப்போமென்றேன். அவர்கள் சம்மதித்தார்கள். எனக்கு கெட்ட எண்ணமில்லாத தால் அவர்கள் எப்படியாவது ராத்திரிக்கு சாப்பிட்டுத் தங்கி யிருக்கட்டுமென்று சமீபத்திலுள்ள ராஜாசர் சவலை ராமசாமி முதலியார் சத்திரத்திற்குப் போகும்படிக்கும், நான் உடனேவரு வதாயும் சொல்லிவிட்டுத்திரும்பிவிட்டேன் அவர்கள் சொன் னது எவ்வளவு தூரமுண்மையோ தெரியவில்லை. எங்களுக்குப் பட்டணத்தில் பந்துக்களாவது தங்கள் இடமாவது இல்லை யென்று சொன்னதால் இரண்டு யுவதிகள் ஒருவயது சென்றவரு டன் குடும்ப மனஸ்தாபமித்தம் வந்து விட்டவர்களாகவே காண ப்பட்டார்கள். இவ்வளவுக்குங்காரணம் பேதமையான அஞ்ஞா னிகளுக்கு இ... குடும்பத்தைவிட்டு வந்து விடத்துணியு ம்படி அதிருப்தியுண்டாக்கின புருஷர்களே! இந்த புருஷர்கள் ஸ்திரீகளை நடத்துவதில் இதை எச்சரிக்கையாய் வைத்துக் கொள்ளவும்.

அநுதாபி க. பி

### காலன்சென்ற மிஸ்டர் ஜஸ்டிஸ் டியாப்ஜி

மிஸ்டர் ஜஸ்டிஸ் பத்ருடீன் டியாப்ஜி இங்கிலண்டில் மரித்துப் போ னதைக் கேட்டு நாம் மிகவும் துக்கிக்கிறோம். இவர் பெரிய காங்கிர ஸ்பிரமுகர். மூன்றாவது காங்கிரஸ்சென்னையில் கூடியபோது அக்கிராசனம் வகித்து மிகவும் சமர்த்தாக ... வும் போற்றினார் மகாஜனங்கள் போதக...

## குறிப்புகள்

[illegible] காலத்தில் இவர் உண்மைத் தேசாபிமானியாய்ப் பண்டித [illegible] முன்வந்து காங்கிரஸில் சேர்ந்து மிகவும் பாடுபட்டிருக்கிறார். [illegible] களுடைய கல்வி விஷயத்தில் இவருக்கு அபரிமிதமான [illegible] பிரியமுண்டு. மிஸ்டர். ஆர். எம். ஸயானி மரித்ததும் தற்போது மிஸ்டர் தயாப்ஜி மரித்ததும் காங்கிரஸுக்குப் பெருத்த நஷ்டமென்பதில் சந்தேகமில்லை. இந்தியர்களைத் தலைமை பூண்டு நடத்தத்தக்கவர்கள் இன்னும் அநேகம் வேண்டியிருக்கும்போது நமக்குள்ள பெரியவர்களை ஒவ்வொருவராக பின்னொருவராக மரிப்பது நம்முடைய துரதிர்ஷ்டமே யன்றி வேறன்று. இவர் பம்பாய் ஹைகோர்ட் ஜட்ஜுகளிலொருவர். மிகவும் நிதானசாலியென்றும் கூரிய அறிவுள்ளவரென்றும் நியாயத்துக்கும் நீதிக்கும் கட்டுப்பட்டவரென்றும் மிகவும் பெரியவரென்றும் பேர்பெற்றவர். இவர் சிலமாதங்களுக்கு முன்பு தமது கண்ணுக்குச் சிகிச்சைசெய்து கொள்ளும்படியாக இங்கிலண்டு சென்றார். இவர் மரிப்பாரென்று ஒருவரும் எதிர்பார்க்கவில்லை. இங்கிலண்டிலேயே மரித்தாரென்ற துக்கச் செய்தி இப்போது எட்டியிருக்கிறது. இவருக்கு மரிக்கும்போது வயது 64.

---

## காலஞ்சென்ற மிஸ்டர் போஸ்

அந்தோ! இந்தியாவின் துர்ப்பாக்கியத்தை என்னென்று சொல்லுவோம். மிஸ்டர் அனந்த மோஹன் போஸ் சென்ற திங்கள் இருபதாம் தேதி மாலை மரித்தாரென்கிற [illegible] பரவியிருக்கின்றது. இவர் வெகுகாலம் வியாதியாகவே இருந்து கடைசியில் கல்கத்தாவில் மரித்துப் போனார். இவரே பெரிய [illegible] அப்பியாஸி, மிகுந்த வல்லமையும் வாக்குச்சாதுரியமும் படைத்தவர், பெரிய தேசாபிமானி, இந்தியர்களின் அருமைக்குறைகளிலெல்லாம் [illegible]. மிஸ்டர் உமேச சந்திர பானர்ஜி மரித்தாரென்று கேட்ட [illegible] இந்தியர்கள் இவர் மரணத்தையும் கேட்டு உருகினார்களென்பதில் சந்தேகமில்லை. சென்ற பதினான்காவது காங்கிரஸ் சென்னையில் கூடியபோது இவர் அக்கிராஸனம் வகித்து மிகவும் சிறந்த பிரசங்கம் செய்தார். இவர் வியாதிப்பட்டு வருந்திவந்த காலத்திலும் காங்கிரஸையும் தாம் இந்தியருக்குச் செய்யவேண்டிய தொழில்களையும் மறந்தவரலர். வங்காள மகாணப் பிரிவினையின் அறிகுறியாகச் சென்ற வருஷம் அக்டோபர் மாதம் 16-ஆம் தேதி யன்று "பெடரேஷன் ஹால்" என்ற கட்டடத்துக்கு இவர் அஸ்திவாரக்கல் நாட்டிச்செய்த பிரசங்கம் மிகவும் இலக்கியமானதாகவும் தேசாபிமானம் பொருந்தியதாகவுமிருந்தது. இவர் கல்கத்தா ஹைகோர்ட்டில் மிகவும் சிறந்த வக்கீல்களிலொருவர். [illegible] தெய்வபக்தியுடையவர். கல்கட்டா ஸர்வகலாசாலையின் பிரதிநிதியாக வங்காளச் சட்டநிரூபணசபையில் கொஞ்சநாள் வேலை பார்த்தவர். சென்ற ஒன்பது வருஷகாலமாக வியாதியாகவே இருந்தார். இவரையும் நாமிப்போது இழந்துபோனதும் நம்முடைய துரதிர்ஷ்டமே.

---

சுமார் 2-வருஷங்களுக்குமுன் கும்பகோணம் போஸ்டாபீஸில் [illegible] கும்பகோணம் தாலுகா [illegible] ரூ 18000-க்கு [illegible] 1000 ரூ [illegible] இந்தியர் [illegible]